உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# தமிழ்நாடு காவல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 22


# மு.க. ஸ்டாலின்
முதலமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–2 |
| II. | நிர்வாக அமைப்பு | 2–6 |
| III | காவல்துறையில் பெண் காவலர்கள் | 6–7 |
| IV. | சட்டம் மற்றும் ஒழுங்கு | 7–17 |
| V. | சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்கள் | 17–31 |
| VI. | நுண்ணறிவுப் பிரிவு | 31–52 |
| VII. | குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை | 52–53 |
| VIII. | இணையதள குற்றப்பிரிவு | 53–57 |
| IX. | பொருளாதார குற்றப்பிரிவு | 57–59 |
| X. | அமலாக்கப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை | 59–66 |
| XI. | சிலை கடத்தல் தடுப்பு குற்றப்புலனாய்வுத் துறை | 66–70 |
| XII. | குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை | 70–73 |

| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| XIII. | பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு | 73–76 |
| XIV. | ஆயுதப்படை | 76–78 |
| XV. | அரசு இருப்புப் பாதை காவல் படை | 78–81 |
| XVI. | சிறப்பு இலக்குப் படை | 81–84 |
| XVII. | செயலாக்கப் பிரிவு | 84–92 |
| XVIII. | கடலோர பாதுகாப்பு குழுமம் | 93–100 |
| XIX. | ஊர்க்காவல் படை மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு | 101–103 |
| XX. | சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு | 103–106 |
| XXI. | போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புப் பிரிவு | 106–109 |
| XXII. | மாநில குற்ற ஆவண காப்பகம் | 110–119 |
| XXIII. | தொழில்நுட்பப் பணிகள் | 119–128 |
| XXIV. | காவல் பயிற்சி | 128–132 |
| XXV. | மோப்பநாய்ப் படை மற்றும் குதிரைப் படை | 132–133 |

| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| XXVI. | கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் | 134–137 |
| XXVII. | தமிழ்நாடு தடய அறிவியல் துறை | 137–142 |
| XXVIII. | காவல் துறை நவீனமயமாக்கல் | 142–143 |
| XXIX. | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் | 143–145 |
| XXX. | காவலர் நலன் | 145–157 |
| XXXI. | முடிவுரை | 157–158 |
| | விளக்கப்படங்கள் மற்றும் பிற்சேர்க்கை I – VII | 159–169 |
| | புகைப்படங்கள் | |

## உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை
## தமிழ்நாடு காவல்துறை மானியக் கோரிக்கை எண்.22
## கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

### I. முன்னுரை

பொது அமைதியை பராமரிப்பது, சட்டங்களை அமுல்படுத்துவது, அவசர காலங்களில் உதவுவது, குற்றங்களை கண்டுபிடிப்பது மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது ஆகியவை காவல் துறையின் இன்றியமையாத பணிகளாகும். இயற்கைப் பேரழிவுகள் மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பேரிடர்களின்போதும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளின்போதும் காவல் துறையினரே மக்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் வழங்குவதற்கு முன்னின்று களப் பணியாற்றி வருகின்றனர்.

தமிழகக் காவல் துறையானது, நாட்டிலேயே சிறப்பாக நிர்வகிக்கப்படும் மாநில காவல் துறைகளில் ஒன்றாக விளங்குகிறது என்ற நற்பெயரை

பெற்றுள்ளது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், மத நல்லிணக்கத்தை பேணவும் தேவையான அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் எந்தவொரு பெரிய அசம்பாவித சம்பவமும் ஏற்படவில்லை.

**இராணுவம், துணை இராணுவம் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் காவல் துறைகளில் சிறப்பாக செயல்படும் அணிக்கு வழங்கப்படும் உயரிய கவுரவமான 'குடியரசுத் தலைவரின் வண்ணக்கொடியை' மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள் 31.07.2022 அன்று தமிழ்நாடு காவல் துறைக்கு வழங்கினார்.**

## II. நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு காவல் துறை மாநில அரசின் உள்துறையின் கீழ் இயங்கி வருகிறது. காவல் துறை இயக்குநர் / காவல் படைத்தலைவர்

தமிழக காவல் துறையை வழிநடத்திச் செல்வதுடன், மாநிலத்தில் காவல் துறையின் அனைத்து செயல்பாடுகளையும் வழிநடத்தி மேற்பார்வையிடுகிறார்.

01.01.2023–ன் படி தமிழக காவல் துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:–

| வ. எண். | பதவிகளின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காவல் துறை தலைமை இயக்குநர் | 10 |
| 2. | கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநர் | 23 |
| 3. | காவல் துறை தலைவர் | 41 |
| 4. | காவல் துறை துணைத் தலைவர் | 32 |
| 5. | காவல் கண்காணிப்பாளர் | 171 |
| 6. | ஆயுதப்படை துணை ஆணையர் | 09 |
| 7. | தளவாய் (த.சி.கா) | 10 |
| 8. | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 197 |
| 9. | காவல் துணை கண்காணிப்பாளர் / உதவி ஆணையர் | 971 |
| 10. | துணை தளவாய் (த.சி.கா) | 16 |
| 11. | உதவி தளவாய் (த.சி.கா.) | 52 |
| 12. | காவல் ஆய்வாளர் | 3,067 |
| 13. | சார்பு ஆய்வாளர் | 10,676 |
| 14. | இதர காவலர்கள் | 1,17,176 |
| **மொத்தம்** | | **1,32,451** |

மாநில காவல் துறை 4 மண்டலங்கள் மற்றும் 9 காவல் ஆணையரகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் விவரம் பின்வருமாறு:–

| மண்டலம் | சரகம் | மாவட்டம் |
|---|---|---|
| வடக்கு | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு |
| | வேலூர் | வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை |
| | விழுப்புரம் | விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் |
| மத்திய | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், அரியலூர் மற்றும் புதுக்கோட்டை |
| | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் |
| மேற்கு | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி |
| | சேலம் | சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |

| | | |
|---|---|---|
| தெற்கு | மதுரை | மதுரை மற்றும் விருதுநகர் |
| | திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| | இராமநாதபுரம் | இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| ஆணையரகங்கள் | | சென்னை மாநகரம் |
| | | தாம்பரம் |
| | | ஆவடி |
| | | திருச்சிராப்பள்ளி |
| | | கோயம்புத்தூர் |
| | | சேலம் |
| | | மதுரை |
| | | திருநெல்வேலி |
| | | திருப்பூர் |
| இரயில்வே | | R.P. சென்னை |
| | | R.P. திருச்சிராப்பள்ளி |

**01.01.2022 நிலவரப்படி, காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் வெளியிட்ட தரவுகளில், நாட்டிலேயே அதிக**

**எண்ணிக்கையிலான காவல் நிலையங்கள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இவற்றின் விவரம் பின்வருமாறு:–**

| **வ. எண்.** | **காவல் நிலையங்கள்** | **காவல் நிலையங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | சட்டம் (ம) ஒழுங்கு காவல் நிலையம் | 1305 |
| 2. | ரயில்வே காவல் நிலையம் | 47 |
| 3. | அனைத்து மகளிர் காவல் நிலையம் (AWPS) | 222 |
| 4. | போக்குவரத்து காவல் நிலையம் (போக்குவரத்து புலனாய்வு பிரிவு உட்பட) | 280 |
| **மொத்தம்** | | **1854** |

**III. காவல் துறையில் பெண் காவலர்கள்**

01.01.2023 அன்று உள்ளபடி, காவல் துறையில் ஒப்பளிக்கப்பட்ட பெண் அதிகாரிகள் / காவலர்களின் எண்ணிக்கை 35,329 ஆகும். மாநில காவல்துறையின் ஒருங்கிணைந்த அங்கமாக உள்ள பெண் காவல் பணியாளர்கள் குற்றங்களைத் தடுத்தல் மற்றும் குற்றங்கள் மீதான விசாரணை

மேற்கொள்ளுதல், போக்குவரத்தை சீர் செய்தல் மற்றும் சட்டம் ஒழுங்கை பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாநிலத்தில் தற்போது 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தாலுகா காவல் நிலையத்திலும் குறைந்தது ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 3 பெண் தலைமை காவலர்கள் பணியில் உள்ளனர். **தமிழ்நாடு காவல் துறையில் 2023–ஆம் ஆண்டு மகளிர் காவலர்களின் பொன்விழா ஆண்டை குறிக்கிறது.**

**IV. சட்டம் மற்றும் ஒழுங்கு**

மாநில அரசின் தலையாய பணிகளுள் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பது முதன்மையானதாகும். தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை அமைதியாக பேணப்பட்டு வருகிறது. பெரிய அளவிலான சாதி மற்றும் வகுப்புவாத மோதல்கள் எதுவும் நிகழவில்லை. சட்டம் ஒழுங்கு பராமரிப்பில்

மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகள், சமூக விரோதிகள் மற்றும் போக்கிரிகளுக்கெதிரான பல்முனை நடவடிக்கைகள் மற்றும் மாநில நுண்ணறிவுப் பிரிவு அளித்த தகவல்களின் அடிப்படையில் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஆண்டு முழுவதும் மாநிலம் அமைதிப் பூங்காவாக திகழ்ந்துள்ளது.

காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட உரிய தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக மதம் சார்ந்த பண்டிகைகள், பொதுவாக சாதி மோதல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சாதித் தலைவர்களின் நினைவுநாள் மற்றும் சாதிய நிகழ்வுகள் போன்றவை அமைதியான முறையில் நடந்தேறின.

மாநிலத்தின் சில இடங்களில் வழிபாட்டு உரிமை கோரியும், கோவில் திருவிழாக்களில் பங்கேற்க

அனுமதி கோரியும் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் போராட்டங்கள் நடத்திய போது வன்முறைக்கு இடம் தராத வகையிலும் பெரிய அளவிலான அசம்பாவிதங்கள் ஏற்படாத வகையிலும் அப்போராட்டங்கள் திறமையாக கையாளப்பட்டன. பல்வேறு பிரச்சனைகளை முன்னிறுத்தி அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்திய போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கோயம்புத்தூர் கார் (எரிவாயு உருளை) குண்டு வெடிப்பு சம்பவத்தில், காவல்துறையினர் துரிதமாக மேற்கொண்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக மாநிலத்தில் அமைதியான சூழல் நிலவியது.

2022-ஆம் ஆண்டு, பல்வேறு அமைப்புகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை

எடுக்கவும் கள அதிகாரிகளுக்கு 20,500 விழிப்பூட்டுத் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

முறையான முன்னெச்சரிக்கை மற்றும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக, பாபர் மசூதி இடிப்பு தினமான டிசம்பர் 6–ஆம் தேதி அமைதியான முறையில் அனுசரிக்கப்பட்டது.

பிப்ரவரி 2023–ல் ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அமைதியாக நடந்தேறியது.

**வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவு**

2021–2022–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் (மானியக் கோரிக்கை எண்.22) 13.09.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து, வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் துயர் துடைக்க, ஜூலை 2022 முதல் சென்னையில் உள்ள காவல் துறை தலைமையகத்தில் வெளிநாடுவாழ் தமிழர் பிரிவு செயல்பட்டு வருகிறது.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் அளிக்கும் புகார்களை இப்பிரிவு கையாண்டு வருகிறது.

வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவானது, நுழைவிசைவு (VISA) பெற்றுத்தருவதாகக் கூறி ஏமாற்றுதல், வெளிநாடுகளில் வேலை வாங்கித்தருவதாக செயல்படும் அங்கீகரிக்கப்படாத வேலைவாய்ப்பு முகமைகள், மாணவர்கள் பிரச்சினை, பிற நாடுகளுக்கு பெண்களை கடத்துதல், திருமணப் பிணக்குகள், இறந்தவர் உடலை தாயகம் கொண்டுவருதல், பாலியல் குற்றங்கள், பிற நாடுகளுக்கு திருப்பி அனுப்புதல், வெளிநாடுகளில் வேலை செய்யும் இடங்களில் உடல் மற்றும் மனதளவிலான துன்புறுத்தல்கள் போன்றவை தொடர்பான புகார்களை விசாரித்து வருகிறது.

வெளிநாடு வாழ் தமிழர்களின் குறைகளுக்குத் தீர்வு காண தமிழ்நாடு அரசின் வெளிநாடு வாழ் தமிழர்

பிரிவானது, புலம்பெயர்ந்தோர் பாதுகாவலர் பிரிவு உள்ளிட்ட மற்றும் பிற துறையினருடன் இணைந்து செயல்படுகிறது. அங்கீகரிக்கப்படாத முகமைகள் மூலம் கம்போடியா, தாய்லாந்து மற்றும் மியான்மர் நாடுகளுக்கு வேலைக்காக சென்று ஏமாற்றப்பட்டு சிக்கித் தவித்த 73 தமிழர்களை வெளிநாடு வாழ் தமிழர் பிரிவு, வெளிநாடுவாழ் இந்தியர் பிரிவுடன் இணைந்து தாய்நாட்டிற்கு அழைத்துவந்துள்ளது.

**சமூக ஊடகப் பிரிவு**

2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல்துறையில் சமூக ஊடகப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு, காவல்துறை தலைமையகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், ஒரு காவல் ஆய்வாளர், மூன்று காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 14 இதர காவல் ஆளிநர்கள் பணியாற்றி வருகின்றனர். பல்வேறு சமூக ஊடக தளங்களில் தமிழ்நாடு காவல்துறையின் அதிகாரப்பூர்வ

கணக்குகளை இயக்கி நிர்வகிக்கும் பணியை சமூக ஊடகப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

முக்கியமான மற்றும் பதற்றமான செய்திகளை வெளியிடும் காட்சி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் குறித்த தகவல்களை முன்கூட்டியே அறிந்து, அது குறித்த விழிப்பூட்டல் தகவல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டு வருகிறது. பல்வேறு சமூக ஊடகங்களை கண்காணித்து, அவற்றில் பகிரப்படும் ஆட்சேபகரமான கருத்துக்கள் குறித்த விரிவான அறிக்கைகள் தினந்தோறும் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. சமூக ஊடகங்களில் பரப்பப்படும் சில உண்மைக்குப் புறம்பான தகவல்கள் குறித்த மறுப்பு அறிவிப்புகளும் உடனுக்குடன் வெளியிடப்படுகின்றன. சமூக ஊடகங்களில் பகிரப்படும் முக்கிய கருத்துக்கள் குறித்த தகவல்களை சேகரிக்கவும், அவற்றின்மீது ஆய்வு மேற்கொள்ளவும் வெளிப்படையான நுண்ணறிவுத் தகவல் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது.

மகளிர் பாதுகாப்பு, இணையவழி குற்றங்கள், வெளிநாடு வாழ் இந்தியர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், போக்குவரத்து விழிப்புணர்வு மற்றும் சாலை பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விழிப்புணர்வு சுவரொட்டிகள் மற்றும் காணொளிகளை உருவாக்கும் பணியை பொதுமக்களின் நலனுக்காக சமூக ஊடகப்பிரிவு செய்து வருகிறது. தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது காவல் ஆளிநர்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

**சாட்சியம் அளிப்பவர்கள் பாதுகாப்பு திட்டம் – 2018**

சாட்சிகளைப் பாதுகாக்கும் திட்டத்தைச் செயல்படுத்த, 2018 ஆம் ஆண்டுக்கான நிலைக்குழு ஒவ்வொரு மாவட்ட மற்றும் நகர அளவில் தீவிரமான குற்றங்களின் குற்றவியல் விசாரணைகளில் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் குழுக்கள் தொடங்கப்பட்டு, சாட்சியம் அளிப்பவர்கள் பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்கள் மாவட்ட முதன்மை நீதிபதியின் தலைமையில் மாநகர காவல் ஆணையர் / மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட தலைமை வழக்கறிஞர் ஆகியோரை உறுப்பினர்களாக கொண்டு செயல்பட்டு வருகிறது. சாட்சியம் அளிப்பவருக்கு நிலவும் அச்சுறுத்தல் குறித்து இக்குழு பரிசீலனை செய்து, வழக்கு விசாரணையின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுப்பதுடன் அனைத்து வகைகளிலும் சாட்சி அளிப்பவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது.

**பாதிக்கப்பட்ட நபர்களுக்கான இழப்பீட்டுத் திட்டம்**

2022–ஆம் ஆண்டு பல்வேறு வழக்குகளில் பாதிக்கப்பட்ட 343 நபர்களுக்கு 6.58 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்க இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**காவல் புகார் அமைப்பு**

மாநில உள்துறையின் கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் தலைமையில் காவல் புகார் விசாரணை அதிகார அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இக்குழுவில், காவல் துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் காவல் துறை கூடுதல் இயக்குநர் (சிபிசிஐடி) ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவானது, காவல் நிலைய மரணங்கள், காவல் நிலையத்தில் பாலியல் மற்றும் கொடுங்காயம் உள்ளிட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அதற்கு மேலான படி நிலைகளில் உள்ளவர்கள் மீதான தீவிர குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதேபோன்று, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட காவல் துறையினருக்கு எதிரான விசாரணை குழுவானது

சார்நிலை காவல் அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மேற்கொள்ளும்.

## V. சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகங்கள்

### (i) பெருநகர சென்னை காவல்

காவல்துறை இயக்குநர் தலைமையில் பெருநகர சென்னை காவல் இயங்கி வருகிறது. 5 கூடுதல் காவல் ஆணையாளர்கள், 7 காவல் இணை ஆணையாளர்கள் மற்றும் 31 காவல் துணை ஆணையாளர்கள் ஆகியோர் அவருக்கு உதவி செய்து வருகின்றனர். 102 உள்ளூர் காவல் நிலையங்கள், 37 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 56 போக்குவரத்து காவல் நிலையங்கள் மற்றும் 24 தனிப்பிரிவுகளுடன் 23,791 காவல் ஆளிநர்கள் பெருநகர சென்னை காவல்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். பெருநகர சென்னை காவல் துறையில் 7 காவல் நிலையங்கள் மதிப்புமிக்க ISO சான்றிதழ்கள் பெற்றுள்ளன. **நேர்மையான அர்ப்பணிப்பு மற்றும் சீரிய காவல் பணி ஆகியவற்றின்**

**காரணமாக சென்னை நகரம் இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரமாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**மகிழ்ச்சி**

பெருநகர சென்னை காவல்துறையில் பணியாற்றும் காவல் ஆளிநர்களின் நலனுக்காக "மகிழ்ச்சி" என்னும் திட்டம் ரூ.25 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், காவல்துறையில் தொடர்ச்சியாக பணிக்கு வராதவர்கள், உடல்நலம் குன்றியவர்கள், மது பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மற்றும் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் உடையவர்கள் என மொத்தம் 459 பேர் மகிழ்ச்சி குழுவினரால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மன நல உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**பறவை**

சிறு குற்றங்களில் முதன்முறையாக ஈடுபடும் சிறார்கள் எதிர்காலத்தில் மீண்டும் ஈடுபடாமல் இருப்பதை உறுதி செய்வது மற்றும் அச்சிறார்கள் மனமாற்றமடைந்து, சமுதாயத்துடன் இணைந்து செயல்படுவதை உறுதி செய்வது என்ற இரட்டைக் கொள்கைகளை முன்னிறுத்தி, "சிறார்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் ஆளுமை மற்றும் அணுகுமுறை சீர்திருத்த உதவித் திட்டம்" (பறவை) என்ற திட்டம் ரூ.1.08 கோடி நிதியில், 01.04.2022 அன்று துவக்கப்பட்டது.

இத்திட்டம் ஆறு படிநிலை செயல்முறைகளை பின்பற்றுகிறது. அவை முறையே, முன் நுழைவு ஆவணப்படுத்துதல் நுழைவு ஆலோசனை, உளவியல் தலையீடு மற்றும் திறன் மதிப்பீட்டு சோதனை, திறன் மதிப்பீட்டு வகுப்புகள் மற்றும் வேலைவாய்ப்புக்கான திறன் மதிப்பீடு. முதன்முறை சிறு சிறு குற்றவாளிகள் அதிக செறிவு உள்ள பகுதிகளுக்கு அருகில் உள்ள

மையம் அவர்களின் அறிவாற்றல் மற்றும் சட்ட ஆதரவை சமாளிக்க தலையீடு மற்றும் பிற செயல்பாடுகளை வழங்கும். இதுவரை, மொத்தம் 323 நபர்கள் பயனடைந்து மீண்டும் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளனர், அவர்களில் 281 முதல் முறை சிறு சிறு குற்றவாளிகள் சைதாப்பேட்டை துணைச் சிறையிலும், 73 குழந்தைகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் மற்றும் சிலர் கெல்லிஸில் உள்ள கண்காணிப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**காவல் கரங்கள்**

சென்னை மாநகர காவல்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட "காவல் கரங்கள்" என்ற திட்டத்தின் நோக்கமானது, ஆதரவற்ற, வீடற்று தவிக்கும், கைவிடப்பட்ட மூத்த குடிமக்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், வீடற்ற குடிமக்கள் ஆகியோரைக் கண்டறிந்து, அரசு சாரா நிறுவனத்தினர், காப்பக அறக்கட்டளைகள், அவசர ஊர்தி சேவை

அளிப்பவர்கள் ஆகியோரின் உதவியுடன் அவர்களுக்கு உறைவிடம், பாதுகாப்பு, ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகள் ஆகியவற்றை வழங்கி, அவர்களின் மறுவாழ்விற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதாகும். இதுவரை சென்னை நகர வீதிகளிலிருந்து வீடற்ற ஆதரவற்ற குடிமக்கள் 4,171 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில், 3,174 நபர்கள் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பப்பட்டு, 525 நபர்கள் அவர்களது குடும்பத்தினருடன் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். 382 நபர்கள் மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 90 நபர்கள் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கேட்பாரற்ற 1,919 நபர்களின் உடல்கள் தன்னார்வலர்களின் உதவியுடன் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டு, புதைக்கப்பட்டன.

**காவல் வரம்புக்குள் வராத பணிகளையும் மேற்கொள்வதைப் பாராட்டி, தமிழக அரசின் சிறந்த**

**செயல்பாட்டிற்கான விருதினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.08.2022 அன்று, "காவல் கரங்கள்" திட்டத்திற்கு வழங்கி கவுரவப்படுத்தினார்.**

**போக்குவரத்து**

வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளுக்கு சமீபத்திய பொது விழிப்புணர்வு தகவல்களை தெரியப்படுத்த சென்னை மாநகரிலுள்ள 47 முக்கிய சந்திப்புகளில் "மாறக்கூடிய செய்தித்திரைகள்" (VMS) நிறுவப்பட்டுள்ளன. மேலும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த 146 சந்திப்புகளில் "நகரும் விழிப்புணர்வு செய்தி பலகை"–உடன்கூடிய போக்குவரத்து கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா நகரிலுள்ள 5 முக்கிய சந்திப்புகளில் அமைக்கப்பட்டுள்ள "போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு பகுதி" (TROZ) என்ற சாதனம், சென்னை போக்குவரத்து காவல் துறையில் வெற்றிகரமாக

செயல்பட்டுவரும் ஒரு திட்டமாகும். இதன்மூலம், போக்குவரத்து விதிகளை மீறியதற்காக நாள்தோறும் சுமார் 7,000 அபராத ரசீதுகள் தானாகவே பதிவு செய்யப்படுகிறது. மேலும், ஸ்பென்சர் சந்திப்பு, ஈகா சந்திப்பு மற்றும் தங்கசாலை சந்திப்பு ஆகிய மூன்று இடங்களில் புதிதாக 214 தானியங்கி பதிவெண் பலகை படிப்பான் (ANPR) கேமராக்களை நிறுவ ரூ.10.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இணையவழி குற்றப்பிரிவு**

மத்திய குற்றப்பிரிவின் அங்கமான இணையவழி குற்றப்பிரிவு, 2022–ஆம் ஆண்டு, பல்வேறு இணையவழி மோசடிகளில் ஈடுபட்ட பிற மாநிலங்களைச் சேர்ந்த 30 குற்றவாளிகளை கைது செய்துள்ளது. இவர்களில் இணையவழி குற்றச் செயல்களின் நகரமாக கருதப்படும் ஜார்க்கண்ட் மாநிலம், ஜம்தாராவைச் சேர்ந்த 3 குற்றவாளிகளும் அடங்குவர்.

பொது மக்களிடையே இணையதள மோசடிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த "முத்துவும் 30 திருடர்களும்" என்ற விழிப்புணர்வு கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பிடத்தகுந்த குற்றங்கள் கண்டறிதல்**

மத்திய குற்றப்பிரிவின் அங்கமான வங்கி மோசடி புலனாய்வு பிரிவு "ஊரக மற்றும் வேளாண் விவசாயிகள் கூட்டுறவு வங்கி" என்ற பெயரில் போலியாக செயல்பட்டு வந்த வங்கியின் நடவடிக்கைகளை கண்டறிந்து முடக்கியுள்ளது.

07.05.2022 அன்று, 13.00 மணியளவில், மூத்த தம்பதியர் காணவில்லை என்ற புகாரின் மீதான விசாரணையில், வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்களும், இனோவா கார் ஒன்றும் காணவில்லையென்று கண்டறியப்பட்டது. காவல் துறையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக, நேபாளத்தைச் சேர்ந்த இரண்டு

குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 1,000 சவரன் தங்க நகைகளும், 50 கிலோ வெள்ளி பொருட்களும், இனோவா கார் ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டன. முக்கியமான இந்த இரட்டை கொலை வழக்கு, பதிவான 6 மணி நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னை அரும்பாக்கத்திலுள்ள FED வங்கியில் பட்டப்பகலில் கொள்ளை நடந்ததாக 13.08.2022 அன்று அளிக்கப்பட்ட புகாரின் பேரில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, வங்கியிலிருந்து களவு போன தங்க நகைகள் (31.7 கிலோ) மூன்று நாட்களுக்குள் மீட்கப்பட்டது.

**போதை மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள்**

போதை மருந்துகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் கீழ் 2022–ஆம் ஆண்டில், 890 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,537 எதிரிகள் கைது செய்யப்பட்டு, 109 வாகனங்கள் மற்றும் ரூ.4.01 கோடி

மதிப்பிலான 1,655.8 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

60,413 புவிசார் உட்சுற்று தொலைக்காட்சி கேமராக்கள் நிறுவப்பட்டதன் பலனாக, குற்றங்கள் விரைந்து கண்டுபிடிக்கப்பட்டதுடன், குற்ற நிகழ்வுகளும் பெருமளவு குறைக்கப்பட்டன.

**(ii). ஆவடி காவல் ஆணையரகம்**

காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையில், 1 காவல் இணை ஆணையாளர், 5 காவல் துணை ஆணையாளர்கள் மற்றும் 15 காவல் உதவி ஆணையாளர்கள் ஆகியோருடன் ஆவடி காவல் ஆணையரகம் 01.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டது. ஆவடி காவல் ஆணையரகத்தில் 25 காவல் நிலையங்கள், 8 போக்குவரத்து காவல் நிலையங்கள், 2 போக்குவரத்து புலனாய்வு பிரிவுகள் மற்றும்

5 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுடன் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணையரகத்திற்குட்பட்ட 25 காவல் நிலையங்களில் உள்ள அனைத்து கண்காணிப்பு கேமராக்களின் நிகழ்வுகளையும் நேரலையில் கண்காணிக்கும் வகையில் "கட்டுப்பாட்டு மற்றும் உத்தரவு மையம்" ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

"போதைப் பொருளில்லா தமிழகம்" என்ற தலைப்பில் ஆவடி காவல் ஆணையரகம் முதன்முதலாக நடத்திய "இரவு நேர நெடுந்தூர ஓட்டம், ஆவடி-2022" என்ற நிகழ்வில், நாடு முழுவதிலும் இருந்து சுமார் 5,000 உணர்வுமிக்க ஓட்டப்பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.

போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கையின் கீழ் 378 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 614 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, ரூ.66 இலட்சம் மதிப்புள்ள 673.607 கிலோ கஞ்சா

பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 31 குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். போதைப்பொருள் விற்பனையில் தொடர்ந்து ஈடுபடும் குற்றவாளிகள் 108 பேருக்கு புதிய சரித்திரப் பதிவேடு துவக்கப்பட்டுள்ளது. 90 குற்றவாளிகளுக்கு எதிராக பாதுகாப்பு செயல்முறைகள் துவக்கப்பட்டு, குற்றவாளிகளின் 26 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. 60 இரு சக்கர வாகனங்கள், 9 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 3 நான்கு சக்கர வாகனங்கள் உட்பட 72 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதானி துறைமுகம், காமராஜர் துறைமுகம் மற்றும் சென்னை துறைமுகம் ஆகிய மூன்று துறைமுகங்களுக்கு செல்லும் வாகனங்கள் விரைந்து செல்லும் வகையில் இந்த வழிகளில் போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

விபத்துக்களை குறைக்க, விபத்து நேரிடும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு, தேவையான ஒளிர்விப்பான்கள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகள் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய முயற்சிகளின் காரணமாக, 2021–ஆம் ஆண்டு பதிவான 1,591 விபத்து வழக்குகளோடு ஒப்பிடும்போது, 2022–ஆம் ஆண்டு 1,524 விபத்து வழக்குகள் பதிவாகின.

**(iii) . தாம்பரம் காவல் ஆணையரகம்**

காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு கூடுதல் காவல் ஆணையாளர், 1 காவல் இணை ஆணையாளர், 6 காவல் துணை ஆணையாளர்கள், 6 கூடுதல் துணை ஆணையாளர்கள் மற்றும் 24 காவல் உதவி ஆணையாளர்கள் ஆகியோருடன் தாம்பரம் காவல் ஆணையரகம் 01.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டு, 20 காவல் நிலையங்கள், 16 போக்குவரத்து காவல் நிலையங்கள், 2 போக்குவரத்து புலனாய்வு பிரிவுகள் மற்றும் 3 அனைத்து மகளிர் காவல்

நிலையங்களுடன், செயல்பட்டு வருகிறது. ஆணையரகம் உருவாக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள்:–

- 230 கொடுங்குற்றவாளிகள் மற்றும் போக்கிரிகள், தமிழ்நாடு சட்டம் 14/1982–ன் கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
- 325 போக்கிரிகள் மற்றும் குற்றச் செயல் புரிபவர்கள் பாதுகாப்பு செயல்முறைகளின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்.
- 12 சிறார்–சிறுமியர் குழுக்கள் மூலமாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் வசிக்கும் 1,212 சிறுவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.
- போக்கிரி நடவடிக்கைகளுக்கு எதிராக 77 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

- போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் 295 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 430 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 640.77 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டிற்கான NDPS சட்டத்தின் கீழ் 54 இரு சக்கர வாகனங்கள், 5 மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 15 நான்கு சக்கர வாகனங்கள் ஆகமொத்தம் 74 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## VI. நுண்ணறிவுப் பிரிவு

காவல் துறை கூடுதல் இயக்குநர் தலைமையில், காவல்துறை தலைவர் மற்றும் காவல்துறை துணைத் தலைவர் ஆகியோருடன் மாநில நுண்ணறிவுப் பிரிவு இயங்குகிறது. பாதுகாப்பு, அமைதி மற்றும் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த தகவல்களை சேகரித்தல், ஒன்றிணைத்தல்,

பகிர்ந்தளித்தல் போன்ற பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இப்பிரிவில் தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, சிறப்புப் பிரிவு மற்றும் திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஆகியவை இயங்கி வருகின்றன.

**தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது, 2 காவல் கண்காணிப்பாளர்கள், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 25 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 90 காவல் ஆய்வாளர்கள், 212 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 644 காவலர்கள் ஆகிய ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுடன் செயல்பட்டு வருகிறது.

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையின் பணியானது மறைமுக மற்றும் நேரடி அரசியல்

நடவடிக்கைகள் மற்றும் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கக்கூடிய, மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய, பல்வேறு மதத்தினர், சாதியினர் மற்றும் வகுப்பினரிடையே பகைமையைத் தூண்டக்கூடிய வகையிலான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் சூழ்ச்சியான செயல்கள் குறித்த தகவல்களை சேகரித்தல், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா துறைகளின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், பொது அமைதிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்கள் மூலம் பகிரப்படும் பதிவுகளைக் கண்காணித்தல், பல்வேறு அரசு சாரா நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல், அத்தியாவசிய சேவைகளின் செயல்பாடுகள் மற்றும் அரசியல், சமூகம், பொருளாதாரம், மதம் உள்ளிட்ட பிற விஷயங்கள் குறித்த மக்களின் பொதுவான உணர்வுகளை பிரதிபலித்தல் ஆகியவை ஆகும். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பணியில் அனைத்து

மட்டங்களிலும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள, இந்தப் பிரிவு சேகரித்த தகவல்களை ஒன்றிணைத்து பகிர்ந்தளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை பல்வேறு அமைப்புகளின் திட்டங்கள் குறித்த பயனுள்ள நடவடிக்கை எடுக்கத்தக்க நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், தேவையான பாதுகாப்பு வழங்கவும், சுமார் 20,500 விழிப்பூட்டல் தகவல்களை கள அதிகாரிகளுக்கு வழங்கியதுடன், மாநிலத்தில் நிகழ்ந்த அனைத்து முக்கிய முன்னேற்றங்கள் குறித்து உடனுக்குடன் அப்போது அரசுக்கு தெரிவிக்கும் பொருட்டு சுமார் 11,000 அறிக்கைகளையும் அனுப்பியுள்ளது.

சொத்துவரி உயர்வு, மின்கட்டண உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்,

நெல் மற்றும் கரும்பு ஆகியவற்றின் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக் கோரியும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழக விரிவாக்கத்திற்கும், பரந்தூர் விமான நிலையத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிப்காட் வளாகம் அமைப்பதற்கும் கையகப்படுத்திய நிலங்களுக்கு போதுமான இழப்பீடு வழங்கக் கோரியும், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரியும், மழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரியும் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய சங்கங்கள் நடத்திய போராட்டங்கள் திறமையாக கையாளப்பட்டன.

சில கடலோர மாவட்டங்களில், விசைப்படகில் அதிக திறன்கொண்ட இயந்திரத்தை பயன்படுத்துவது, மீன் பிடிக்க தடை செய்யப்பட்ட சுருக்கு மடி வலையை பயன்படுத்துவது மற்றும் இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவது உள்ளிட்டவற்றிற்கு

எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் நடத்திய போராட்டங்கள் திறமையாக கையாளப்பட்டன.

**பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வத் துறையானது, 2 காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 27 காவல் ஆய்வாளர்கள், 214 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 184 பிற காவல் ஆளிநர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பாதுகாப்புப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது தமிழகத்திற்கு வருகை தரும் அயல் நாட்டு அதிபர்கள், இதர பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்கள் உள்ளிட்ட அதிமுக்கிய/ முக்கிய நபர்களுக்கான பாதுகாப்பு, தவிர தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கிய நபர்கள் மற்றும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், அயல்

நாட்டவரின் நடவடிக்கைகள், முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள், பாதுகாப்புத் திட்டங்கள், குடிபெயர்வோர் விசா மற்றும் வெளிநாட்டவர் பதிவு மற்றும் கண்காணிப்பு (IVFRT) தொகுதிகள், கடவுச்சீட்டு மற்றும் உள் நுழைவு இசைவு தொடர்பான மற்றும் ஆளில்லா விமானங்கள்/ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை நிர்வகித்தல் தொடர்பான பணியினையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

2022-2023-ம் ஆண்டில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் இரண்டுமுறையும், மாண்புமிகு பாரதப் பிரதமர் நான்கு முறையும் மற்றும் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் எட்டு முறையும் தமிழகத்திற்கு வருகை புரிந்தபோது பாதுகாப்பு வழங்கப்பட்டது. இது தவிர, புகழ் பெற்ற வெளிநாட்டினர் 46 பேர் வருகை புரிந்தபோதும், பல்வேறு வகைகளின்கீழ் 255 நபர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழ்நாட்டில் தங்கியுள்ள 218 மிக

முக்கிய நபர்களுக்கு அச்சுறுத்தலின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

44வது சர்வதேச சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் 28.07.2022 முதல் 10.08.2022 வரை செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்றது. அந்நிகழ்ச்சியின்போது, நாசவேலை தடுப்பு சோதனை நடத்தப்பட்டு, நுழைவாயிலில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அந்தமான் நிகோபார் தீவுகளில் நடந்த ஜி–20 மாநாட்டிற்காக, நாசவேலை தடுப்பு சோதனைக்கென பைகளை ஸ்கேன் செய்யும் ஒரு ஊடுகதிர் கருவியும், மோப்ப நாயுடன் (வெடிபொருட்கள்) கூடிய வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்புப் பிரிவும் அத்தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவு**

முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவானது, 1 காவல் கண்காணிப்பாளர், 1 கூடுதல் காவல்

கண்காணிப்பாளர், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 18 காவல் ஆய்வாளர்கள், 38 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 99 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகம் அல்லது சென்னை மாநகரம், தமிழ்நாட்டிலுள்ள இதர மாவட்டங்கள் அல்லது வெளிமாநிலங்களுக்கு செல்லும்போது அவருக்கு தேவையான தகுந்த பாதுகாப்பை வழங்கி வருகிறது.

**திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு**

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது 1 காவல் கண்காணிப்பாளர், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 21 காவல் ஆய்வாளர்கள், 29 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 314 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவானது அமைப்பு ரீதியாக செயல்படும் குற்ற குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் நடமாட்டங்கள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டி, அக்குழுக்களை கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டது. இப்பிரிவு, ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் கடத்தல், ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல், பண மோசடி, ஹவாலா பணப் பரிமாற்றம், கள்ள நோட்டுப் புழக்கம், போக்கிரிகளின் நடவடிக்கைகள், இணையவழி குற்றங்கள், கடன் அட்டை மோசடிகள் மற்றும் சிறை நடவடிக்கைகள் ஆகியவை குறித்த நுண்ணறிவுத் தகவல்களை திரட்டி வருகிறது.

இவை தவிர, போதைப் பொருள் கடத்தல், போலி கடவுச் சீட்டு உள்ளிட்டவை குறித்த நுண்ணறிவுத் தகவல்களை வருவாய் நுண்ணறிவு இயக்குநரகம், போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு, மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு மற்றும் சுங்கத் துறை

அதிகாரிகளுக்கு தெரிவித்து, அச்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்த தரவுகளை தயாரித்தல் மற்றும் தரவுகளை மேம்படுத்தும் பணிகளையும் மேற்கொள்கிறது.

- திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு தலைமையகம் மற்றும் சரக அலகுகளின் அன்றாட பணிகளை கணினிமயமாக்குதல், எந்தவொரு தலைப்பின் கீழும் அறிக்கைகளை தேவைப்படும் விதத்தில் உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.

- திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு தொடர்புடைய அனைத்து கோப்புகளையும் அதன் துவக்கம் முதல் இது நாள் வரையிலானவற்றை ஆவணப்படுத்துதல் மற்றும் எளிதாக எந்தவொரு குறிப்பையும் கையாளுதல் மற்றும் முறையாக பெறுதல்.

- அலகுகளின் எழுத்தர்களுக்கு விவரப் பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களைப் புதுப்பித்து வைத்திருத்தலின் அவசியம் குறித்து அவ்வப்போது பயிற்சி வழங்குதல்.

2022–ஆம் ஆண்டு, உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் இதர வகைகள் தொடர்பாக மாநிலம் முழுவதும் பிரிவு அதிகாரிகளுக்கு 2,142 விழிப்பூட்டுத் தகவல்கள் அனுப்பப்பட்டன. அதன் பேரில், 346 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 426 குற்றவாளிகள் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகள் 107/110–ன்கீழ் பிணைபடுத்தப்பட்டு, 67 எதிரிகள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 144 பிணையில் வெளிவர இயலா பிடியாணைகள் நிறைவேற்றப்பட்டு, 52 புதிய அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, 94 போக்கிரிகளின் மீது சரித்திரப் பதிவேடுகள் துவக்கப்பட்டன. திட்டமிட்ட குற்றத் தடுப்புப் நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த தகவலின்பேரில்,

மாவட்ட அதிகாரிகள் குறித்த நேரத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அபாயகரமான போக்கிரிகளை கைது செய்து, அவர்களின் குற்ற நடவடிக்கைகளை தடுத்துள்ளனர்.

2022–ஆம் ஆண்டு, 268 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இப்பிரிவினர், எஸ்.பி.எம்.எல் துப்பாக்கி–2, எஸ்.பி.பி.எல் துப்பாக்கி–1, பிக் வெடிகுண்டு–1, நாட்டு பிளாஸ்டிக் ஏர் துப்பாக்கி–1, வெடிமருந்து–200 கிராம், எலக்ட்ரிக் டெட்டனேட்டர்–501, வெள்ளை ப்யூஸ்–8,000, பட்டாசுகள்–800 கிராம், ஸ்லர்ரி–4,210 ஆகியவற்றை சமூக விரோதிகளிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த விழிப்பூட்டுத் தகவல்கள் அடிப்படையில், எஸ்.பி.எம்.எல் துப்பாக்கி–5, நாட்டு கைத்துப்பாக்கி–1, ஏர் கைத்துப்பாக்கி–1 மற்றும் பயன்படுத்தப்படாத

துப்பாக்கி குண்டுகள்–50, மான் இறைச்சி–10 கிலோ, நாட்டு பட்டாசுகள்–45, பட்டாசுகள்–73, எலக்டரிக் டெட்டனேட்டர்–2, சல்பர்–650 கிராம், வெடிமருந்து–10 கிலோ மற்றும் ஜெலட்டின் குச்சிகள்–2, பிக் வெடிகுண்டுகள்–5 ஆகியவை உள்ளூர் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

2022–ஆம் ஆண்டு, சுமார் 1,406 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர், ரூ.1.18 கோடி மதிப்புள்ள 7,854.595 கிலோ புகையிலை பொருட்கள், ரூ.35.60 லட்சம் மதிப்புள்ள 355.95 கிலோ கஞ்சா ஆகியவற்றை பல்வேறு நகரங்கள் மற்றும் மாவட்டங்களிலிருந்து கைப்பற்றினர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவினர் அளித்த விழிப்பூட்டுத் தகவல்கள் அடிப்படையில், ரூ. 2.65 கோடி மதிப்புள்ள 2,654.355 கிலோ கஞ்சா,

ரூ 54 லட்சம் மதிப்புள்ள 3598.90 புகையிலைப் பொருட்கள் ஆகியவை உள்ளூர் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

2022-ஆம் ஆண்டு, போலி இந்திய ரூபாய் நோட்டு, பண மோசடி, போலி கடவுச்சீட்டு, ஹவாலா பரிவர்த்தனைகள் மற்றும் மோசடி தொடர்பாக 953 விழிப்பூட்டுத் தகவல்கள் மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், தடைசெய்யப்பட்ட லாட்டரிச் சீட்டு விற்றதற்காக 78 குற்றவாளிகளும், சூதாட்டத்தில் ஈடுபட்ட 126 பேரும், மோசடி குற்றங்களில் ஈடுபட்ட 11 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். 8,32,180 கிலோ கடத்தப்பட்ட பொது விநியோகத் திட்ட அரிசி, 1,225 கிலோ கடல் அட்டை, 4 ஆம்பர்கிரீஸ், 3,796 கிலோ மஞ்சள் மற்றும் 2 மான் கொம்பு ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

**'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை**

'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது, 1 காவல் கண்காணிப்பாளர், 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 13 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 34 காவல் ஆய்வாளர்கள், 293 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 586 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

'க்யூ' பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி புலன் விசாரணை செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட அலகுகள் (மொத்தம் 31) காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'க்யூ' பிரிவு வழக்குகளில் சம்பந்தப்பட்டு தேடப்பட்டுவரும் தலைமறைவு குற்றவாளிகள்,

குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அங்கத்தினர்களைக் கைது செய்யவும், தலைமறைவாக இருப்பவர்களின் இருப்பிடம் குறித்து தகவல்களைத் திரட்டவும் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவோயிஸ்டுகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைத் திரட்டவும், வளர்ந்துவரும் இடதுசாரி தீவிரவாத குழுக்களின் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தவும், புதிய தகவலர்களை உருவாக்குவதற்கு நுண்ணறிவுப் பிரிவு முடுக்கி விடப்பட்டுள்ளது. துணை உளவு அமைப்புகளுடன் நுண்ணறிவுத் தகவல்கள் பகிர்வு தொடர்ந்து முழு வீச்சில் நடந்து வருகிறது. மாவோயிஸ்டுகளின் நடமாட்டம் குறித்து பெறப்படும் நுண்ணறிவுத் தகவல்கள் பிற மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

2022–ஆம் ஆண்டு, தூத்துக்குடி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர், 20.295 கிலோ

வெள்ளி கொலுசுகள், 9.985 கிலோ கிரிஸ்டல் மெத்தாம்பெடமைன், 908.600 கிலோ கஞ்சா, 5,030 கிலோ பீடி இலைகள், 3,630 கிலோ கடல் அட்டைகள், 550 கிலோ ஏலக்காய், 3,375 கிலோ மஞ்சள், 690 கிலோ சுறா இறக்கைகள், 8,44,430 பிரகபெலைன் மாத்திரைகள் 150 மி.கி. மற்றும் 230 ஸ்லர்ரி ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

**சிறப்புப் பிரிவு**

சிறப்புப் பிரிவானது, 1 காவல் கண்காணிப்பாளர், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 11 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 31 காவல் ஆய்வாளர்கள், 102 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 191 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

1998–ஆம் ஆண்டு நடைபெற்ற கோவை தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தினை தொடர்ந்து, அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாத அமைப்புகள்

தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டி, அவ்வமைப்புகளின் நேரடி மற்றும் மறைமுக நடவடிக்கைகளை கண்காணித்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறப்புப் பிரிவு துவக்கப்பட்டது. சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 8 இடங்களில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் தற்போது இயங்கி வருகின்றன.

சிறப்புப் பிரிவு அளித்த இரகசிய தகவல்களின் அடிப்படையில், 4 ஐஎஸ்ஐஎஸ் அனுதாபிகள் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டதன் மூலம் அவர்களின் கொடூரச் செயல்பாடுகள் தடுக்கப்பட்டன.

22.09.2022 அன்று, மாநிலத்தில் உள்ள பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பின் நான்கு அலுவலகங்கள் மற்றும் அவ்வமைப்பின் நிர்வாகிகளின்

வீடுகளில் தேசிய புலனாய்வு முகமை சோதனை நடத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா மற்றும் சோஷியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள்/ அடிப்படைவாதிகள், அரசுப் பேருந்துகள் மீது கற்கள் வீசுதல், பெட்ரோல் குண்டுகள் வீசுதல், இந்து மத அமைப்புகளின் நிர்வாகிகள் வீடுகள் / வாகனங்களுக்கு தீ வைத்தல் போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டறிவதிலும், பெட்ரோல் குண்டுகள் வீச்சு சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்வதிலும் சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு இப்பிரிவு முக்கிய தகவல்களை வழங்கியது.

தீவிரவாத சித்தாந்தம் மற்றும் பயங்கரவாத அமைப்பின்பால் கனிவான போக்கு கொண்ட பல இளைஞர்களை அடையாளம் காண சிறப்புப் பிரிவு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அவர்களை

சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைக்கும் வகையில், மத அறிஞர்கள், மனநல மருத்துவர்கள் உள்ளிட்டோர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழுவின் உதவியுடன் 2022-2023-ஆம் ஆண்டு தீவிரவாத சித்தாந்தமுடைய 9 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 70 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டு வாழ்க்கையின் மைய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

நுண்ணறிவுப் பிரிவின் சுமூகமான மற்றும் திறன் வாய்ந்த செயல்பாட்டிற்காக தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு 11 காவல் துணை கண்காணிப்பாளர்கள் பணியிடங்களை உருவாக்க அரசு 21.10.2022 அன்று அனுமதியளித்துள்ளது.

தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரத்தில் சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு அலகுகளை உருவாக்க அரசு

அறிவிப்பு வெளியிட்டு, 01.09.2022 அன்று முதல் அப்பிரிவுகள் செயல்படத் துவங்கியுள்ளன.

## VII. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையானது, 1 காவல்துறை கூடுதல் இயக்குநர், 2 காவல்துறை தலைவர்கள், 1 காவல்துறை துணைத் தலைவர், 5 காவல் கண்காணிப்பாளர்கள், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 25 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் சிறப்பு புலனாய்வு பிரிவு உட்பட 848 பிற நிலை காவலர்களுடன் செயல்பட்டு வருகிறது. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில், 37 அலகுகள், 7 திட்டமிட்ட குற்றச்செயல்கள் தடுப்புப் பிரிவுகள், 4 கள்ள நோட்டுக்களைக் கண்டறியும் பிரிவுகள், 5 சிறப்பு புலனாய்வுப் பிரிவுகள், இணையதள குற்றத் தடுப்புப் பிரிவு, ஆட் கடத்தல் தடுப்பு மற்றும் பிற சிறப்பு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, பன்னாட்டு காவல் முகமையின் (Interpol) தமிழ்நாடு மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. அடிப்படைவாத வழக்குகள் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு எதிரான வழக்குகளை சிறப்பு புலனாய்வுப் பிரிவு (SID) கையாண்டு வருகிறது.

2022 ஆம் ஆண்டில், 41 வழக்குகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 18 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்துள்ளன. 171 வழக்குகள் மாற்றப்பட்டுள்ளன.

## VIII. இணையதள குற்றப்பிரிவு

காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையின்கீழ் இணையதள குற்றப்பிரிவு செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தில் இணையதள குற்ற உட்பிரிவுக்கு 3 காவல் கண்காணிப்பாளர்களும், இணையதள குற்றப்பிரிவு அரங்கத்திற்கு ஒரு காவல்

கண்காணிப்பாளரும் ஆகமொத்தம் 221 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. மாநில இணையதள குற்றப்பிரிவிற்கு ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 10 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 11 ஆய்வாளர்கள், 40 உதவி ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்), 128 இதர ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் ஆகிய பணியிடங்கள் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாவட்டம் / ஆணையரகம் மற்றும் சிறப்புப் பிரிவுகளிலும் தலா ஒரு பிரிவு என்ற அடிப்படையில் மாநிலத்தில் மொத்தம் 46 இணையதள குற்றக் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 26.07.2022 அன்று, மயிலாடுதுறை இணையதள குற்றக் காவல் நிலையம் உருவாக்கப்பட்டது.

வலைதள கட்டமைப்பை அமைக்கவும், இணையதள குற்றப்பிரிவு காவல் நிலையங்கள், இணையதள குற்ற பிராந்திய ஆய்வகங்கள் மற்றும் சென்னையில் மாநில இணையதள குற்ற வழிகாட்டி மையம் அமைக்கவும் தேவையான வன்பொருள் மற்றும் மென்பொருள் உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்கு, அரசு ரூ.28.97 கோடி ஒப்பளித்துள்ளது.

இணையதள நிதி மோசடி வழக்குகள் தொடர்பாக "1930" என்ற உதவி எண்ணின் மூலம் பெறப்படும் அழைப்புகளை கையாள இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தில் 24x7 மணி நேரமும் செயல்படும் தனி கட்டுப்பாட்டு அறை தொடங்கப்பட்டுள்ளது. தேசிய இணையதள குற்ற அறிக்கையிடல் வலைப்பின்னலை அணுக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இணையதள குற்றப்பிரிவு சார்பில் கடந்த டிசம்பர் 2022-ல் "தமிழ்நாடு காவல்துறை ஹாக்கத்தான்

போட்டி 2022 (Hackathon 2022)" நடத்தப்பட்டது. அதில் தர்க்க ரீதியான மற்றும் குறியீட்டு திறன்களைப் பயன்படுத்தி காவல் துறையின் சிக்கல்களைத் தீர்க்க மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

85 இணையதளங்கள், 46 யூ–டியூப் காணொளிகள், 59 பேஸ்புக் பக்கங்கள்/சுய விவரங்கள், 6 இன்ஸ்டாகிராம் பக்கங்கள், 15 டுவிட்டர் பக்கங்கள் மற்றும் 211 கூகுள் பிளே ஸ்டோர் பயன்பாடுகள் போலியானதாக/ மோசடியானதாக கண்டறியப்பட்டு அவை இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்தால் முடக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் இணையதள மோசடிகள் குறித்து இணையதள குற்றப்பிரிவானது பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் நடத்தியுள்ளது.

01.01.2022 முதல் 31.03.2023 வரையிலான காலகட்டத்தில், NCRB ஆல் பதிவுசெய்யப்பட்ட

புகார்களின் எண்ணிக்கை 80,148 ஆகும். மேற்கண்ட புகார்களின் மூலம் இழக்கப்பட்ட தொகையான ரூ.372.37 கோடியில், ரூ.158.03 கோடி முடக்கப்பட்டது மற்றும் ரூ.30.91 கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்டது.

### IX. பொருளாதாரக் குற்றப் பிரிவு (EOW)

பொருளாதார குற்றப் பிரிவானது காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. காவல்துறை தலைவர் ஒருவரும், 4 காவல் கண்காணிப்பாளர்களும், 24 துணை காவல் கண்காணிப்பாளர்களும், 57 ஆய்வாளர்களும், 106 உதவி ஆய்வாளர்களும் மற்றும் 462 இதர ஆளிநர்களும் காவல்துறை கூடுதல் இயக்குநருக்கு உதவிபுரிந்து வருகின்றனர்.

இந்தப் பிரிவு வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள், பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள், கூட்டுறவு சங்க

நிதி முறைகேடுகள் மற்றும் பிற மோசடிகள் தொடர்புடைய வழக்குகளை கையாள்கிறது.

01.01.2022 முதல் 75 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதில் 51 வழக்குகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2,86,465 டெபாசிட்தாரர்கள் ரூ.12,410.74 கோடியை இழந்துள்ளனர். இந்த வழக்குகளில் 143 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலகட்டத்தில், **98** வழக்குகள் சிறப்பு நீதிமன்றங்களால் தீர்க்கப்பட்டன,அவற்றில் **60** வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன மற்றும் அதிகபட்ச தண்டனையாக **10** ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. **1,681** டெபாசிட்தாரர்கள் / பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.**26.08** கோடிகள் திருப்பி அளிக்கப்பட்டன. ரூ.**486.99** கோடி சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டன, அவை அரசாங்கத்தால் இணைக்கப்பட்டு, பின்னர் ஏலம் விடப்பட்டு, டெபாசிட்

செய்தவர்களுக்கு / பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

**X. அமலாக்கப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை**

போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தலை ஒழிப்பதற்கு திறம்பட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, போதைப் பொருட்கள் தடுப்பு நுண்ணறிவு குற்றப்புலனாய்வுத் துறையுடன் ஒருங்கிணைப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவிப்பின் படி, அமலாக்கப் பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை அமைப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டது. இப்பிரிவிற்கு தேவையான ஆளிநர்கள் மற்றும் உபகரணங்களை ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அமலாக்கப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், போதைப் பொருட்கள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், அறிவுசார் சொத்துரிமை

சட்டம் மற்றும் விபச்சார தடுப்பு சட்டம் ஆகியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்புள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் அமலாக்கப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அமைக்கப்படும். தற்போது மாவட்டங்களில் செயல்பட்டுவரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் பணியாற்றக்கூடியவர்களின் பணிகள் மறுவரன் முறைபடுத்தப்பட்டு, போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை அமலாக்கும் பொறுப்பு மாவட்ட அமலாக்கப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எடுத்துச் செல்லுதல், கையிருப்பில் வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றை முற்றிலுமாக தடுப்பது என்ற இலக்குடன் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு செயல்பட்டு வருவதுடன், கள்ளச்சாராயம் கடத்தலை தடுப்பது, ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியாவில்

தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகள் கடத்தப்படுவதை தடுப்பது ஆகிய பணிகளிலும் மதுவிலக்கு அமலாக்கத்துறை ஈடுபட்டு வருகிறது. காவல்துறை தலைவர் ஒருவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள், 7 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 30 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 95 ஆய்வாளர்கள், 174 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 1,580 இதர ஆளிநர்கள் ஆகியோர்களைக் கொண்டு நமது மாநிலத்தில் மொத்தம் 101 மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சிறப்பு தனிப்படைகள் அமைக்கப்பட்டு, நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையிலும், தீவிர மதுவிலக்கு குற்றவாளிகளின் தொலைபேசி தொடர்புகளை ஆய்வு செய்தும் சட்டவிரோதமாக எரிசாராயம், கள்ளச்சாராயம் கடத்தப்படுவதையும், அண்டை மாநிலங்களிலிருந்து குற்றவாளிகளால் மதுபானங்கள் கடத்தப்படுவதையும் தடுப்பதற்காக

தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் மொத்தம் 45 மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு நிரந்தர காவல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் கள்ளச்சாராய மரணங்கள் ஏதும் நிகழவில்லை. 2022–ஆம் ஆண்டு 105 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, 37,217 லிட்டர் எரிசாராயமும், 4,682 கள்ளச்சாராய பாட்டில்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், பிற பிரிவுகளில் 1,40,649 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11,828 பெண்கள் உட்பட 1,39,697 பேர் கைது செய்யப்பட்டனர்.

2022–ம் ஆண்டில் 8 லாரிகள், 7 வேன்கள், 231 கார்கள், 65 ஆட்டோக்கள் மற்றும் 2,646 இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட 2,957 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 4493 வாகனங்கள்

ஏலம் விடப்பட்டு ரூ.9.7 கோடி அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டன.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் வாயிலாக மின்கலனுடன் கூடிய சூரிய சக்தியில் இயங்கும் ஜெனரேட்டர்களை 20 சோதனைச் சாவடிகளில் அமைக்க அரசு ரூ. 7.11 லட்சம் ஒதுக்கியுள்ளது.

2022–ஆம் ஆண்டில் மொத்தம் 3,275 தொலைபேசி அழைப்புகள் உதவி எண்–10581 மூலம் பெறப்பட்டு, அந்த புகார்கள் அனைத்தின் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மாநிலத்தில் எந்த பகுதியிலும் கஞ்சா பயிரிட்டு வளர்க்கப்படுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு பூஜ்ஜியம் என்ற அளவில் உள்ளது. 2022–ஆம் ஆண்டில் 10,665 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 19 வெளிநாட்டினர் உட்பட 14,934 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 28,383 கிலோ கஞ்சா,

63,848 எண்ணிக்கையிலான தடை செய்யப்பட்ட மாத்திரைகள் மற்றும் 98 கிலோ இதர போதை பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கடந்த 06.12.2021 முதல் 05.01.2022 வரையில், "கஞ்சா மற்றும் குட்கா ஆபரேசன் 1" என்ற பெயரில் நடத்தப்பட்ட வேட்டையில், போதைப் பொருட்கள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 1,272 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,221 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 2,299 கிலோ கஞ்சா மற்றும் 23 கிலோ ஹெராயின் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த 28.03.2022 முதல் 27.04.2022 வரை "கஞ்சா மற்றும் குட்கா ஆபரேசன் 2.0" என்ற பெயரில் நடத்தப்பட்ட வேட்டையில், போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 2,023 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,423 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 3,562.5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டன.

முதல்முறையாக, போதைப்பொருள் கொடுங் குற்றவாளிகள் மீது பதிவு செய்யப்பட்ட 72 வழக்குகளில், நிதி சார்ந்த புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் சேர்த்து வைத்துள்ள மொத்தம் 17.87 கோடி ரூபாய் மதிப்பிலான 151 அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் அவர்களது உறவினர்கள்/நண்பர்கள் பெயரில் ரூ.2 கோடி இருப்பு வைக்கப்பட்டுள்ள 4,994 வங்கிக் கணக்குகள் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 102—ன் கீழ் முடக்கப்பட்டன.

11.08.2022 அன்று அமலாக்கப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினர் மாநிலம் முழுவதும் போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழி எடுப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் மாநில

**அளவில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கல்லூரி மற்றும் பள்ளிகளில் படிக்கும் 74 இலட்சம் மாணவர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் பங்கேற்று, போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்வானது உலக சாதனைகளை பதிவு செய்யும் அமைப்பால் ஒரு உலக சாதனையாக அங்கீகரிக்கப்பட்டது.**

போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள அரசு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப் பொருட்களுக்கு எதிரான மன்றங்கள் அமைக்கப்பட்டு, "எனக்கு வேண்டாம்" என்ற வில்லைகள் 50 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## XI. சிலை கடத்தல் தடுப்புப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை

சிலை கடத்தல் தடுப்புப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையானது கூடுதல் காவல்துறை இயக்குநர்

தலைமையில் இயங்கி வருகிறது. காவல்துறை தலைவர் ஒருவர், காவல் கண்காணிப்பாளர் ஒருவர், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 9 ஆய்வாளர்கள், 27 உதவி ஆய்வாளர்கள், 100 இதர ஆளிநர்கள் ஆகியோர் இப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர்.

சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையானது தொன்மை வாய்ந்த சிலைகள் திருட்டு, 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சிலைகள் திருட்டு, மாநிலம் முழுவதும் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலும் தொடர்புடைய சிலைகள் திருட்டு வழக்குகள், ரூபாய் ஐந்து லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட விலை மதிப்புள்ள சிலைகள் திருட்டு வழக்குகள் மற்றும் மாநில அரசின் ஆணையின் பேரிலான சிலைகள் திருட்டு வழக்குகளை புலன் விசாரணை செய்து வருகிறது.

வெளிநாடுகளில் உள்ள நம்முடைய சிலைகளை சட்டப்பூர்வ நடைமுறைகள் மூலம் மீட்டு கொண்டு வந்தும், நமது கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாத்தும், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையானது சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. நமது மாநிலத்தில் மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் திருடப்பட்ட சிலைகளைக் கண்டுபிடிப்பதில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை மகத்தான சாதனை படைத்துள்ளது. நுண்ணறிவுத் தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளிநாடுகளில் உள்ள அதிகாரிகளுடனான தொடர்பு பலப்படுத்தப்பட்டதன் விளைவாக சிலை கடத்தல் வழக்குகள் நன்கு கண்டறியப்பட்டு முக்கிய சிலைகள் மீட்கப்பட்டன.

சிலை கடத்தல் வழக்குகளில் மீட்கப்பட்ட அனைத்து சிலைகள் மற்றும் தொல்பொருட்களை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவில் முப்பரிமாண தொழில்நுட்ப புகைப்படம் எடுத்து டிஜிட்டல்மயமாக்க

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்து சமய அறநிலையத்துறையால் நிர்வகிக்கப்படும் கோவில்களில் உள்ள அனைத்து சிலைகள் மற்றும் கலைப்பொருட்களை முப்பரிமாண தொழில்நுட்ப புகைப்படம் எடுத்து, அவற்றை டிஜிட்டல்மயமாக்கி இந்து சமய அறநிலையத் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ததன் விளைவாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் திருடப்பட்ட சிலைகளை அடையாளம் காணவும், மீட்கப்பட்ட சிலைகளுடன் திருடப்பட்ட சிலைகளை ஒப்பிட்டு பார்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2022–ஆம் ஆண்டில், 63 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது மட்டுமின்றி, வேறு இடத்தில் பதிவு செய்யப்பட்ட 48 வழக்குகள் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிற்கு பின்னர் மாற்றம் செய்யப்பட்டன. இவ்வழக்குகளில், 45 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 249 சிலைகள் (வெளிநாடுகளிலிருந்து மீட்டுக் கொண்டு வரப்பட்ட 10 சிலைகள் உட்பட)

தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்பு பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

## XII. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை

கூடுதல் காவல்துறை இயக்குனர் தலைமையின்கீழ் இயங்கி வரும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில், 4 காவல் கண்காணிப்பாளர்கள், 12 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 24 ஆய்வாளர்கள், 57 உதவி ஆய்வாளர்கள், 322 தலைமைக் காவலர்கள்/ காவலர்கள் மற்றும் இதர அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையானது, (அ) அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 மற்றும் (ஆ) கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோக பராமரிப்புச் சட்டம், 1980 ஆகிய இரு சட்டங்களை அமலாக்கம்

செய்து வருகிறது. இப்பிரிவின் அமலாக்க நடவடிக்கைகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ எண் | விவரம் | 2022 ஜனவரி – டிசம்பர் | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன்கீழ் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் | 9325 | | | | |
| 2 | **மொத்த பறிமுதல்** | **வழக்குகள்** | **அளவு** | **மொத்த மதிப்பு (ரூ.)** | | |
| | அ) பொது விநியோக திட்டத்திற்கான அரிசி (குவிண்டால்) | 7515 | 67511 | 38,143,715 | | |
| | ஆ) பொது விநியோக திட்டத்திற்கான மண்ணெண்ணெய் (லிட்டர்கள்) | 572 | 15217 | 2,28,255 | | |
| | இ) சமையல் எரிவாயு உருளை (எண்ணிக்கை) | 1114 | 1492 | 13,42,800 | | |
| | ஈ) இதர பொருட்கள் (மதிப்பு) | 124 | | 2,63,59,722 | | |
| | உ) நெல் (கிலோ & மதிப்பு) | 0 | 0 | 0 | | |
| 3 | சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூபாயில் | 6,60,74,492 | | | | |
| 4 | மொத்த கைது நடவடிக்கைகள் | 9242 | | | | |
| 5 | பறிமுதல் செய்யப்பட்ட மொத்த வாகனங்கள் | இரு சக்கரம் | மூன்று சக்கரம் | நான்கு சக்கரம் | இதர | மொத்தம் |
| | | 610 | 124 | 1305 | 1 | 2040 |
| 6 | கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் | 80 | | | | |

| வ எண் | விவரம் | 2022 ஜனவரி – டிசம்பர் |
|---|---|---|
| | விநியோக பராமரிப்புச் சட்டம், 1980–ன் கீழான தடுப்பு டவடிக்கைகள் | |
| | **டீசல் வழக்குகளின் சுருக்கம்** | |
| 7 | வழக்குகளின் எண்ணிக்கை (உயிரி டீசல்) | 27 |
| 8 | உயிரி டீசல் (லிட்டர்கள்) | 2,53,034 |
| 9 | பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | 22 |

07.05.2021 முதல் 31.03.2023 வரையிலான காலகட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட 3,894 வாகனங்கள் கழிவு செய்யப்பட்டு, அவை ஏலம் விடப்பட்டு, அதன்மூலம் பெறப்பட்ட ரூ.14.98 கோடி அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான காணொலி மோசடி கண்டுபிடிப்பு அமைப்பை 2 கிடங்குகளில் ஏற்படுத்தி முன்னோட்ட ஆய்வு மேற்கொள்ள ரூ.18,36,000/– ஒதுக்கப்பட்டுள்ளது. அண்ணா நகர் மற்றும் மின்ட் பகுதிகளில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்

கழக கிடங்குகள் இந்த முன்னோட்ட ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, மென்பொருள் மேம்பாட்டாளரிடமிருந்து அறிக்கை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## XIII. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்கிறது. கூடுதல் காவல்துறை இயக்குனரின் கீழ் இயங்கி வரும் இப்பிரிவின் செயல்பாடுகளை, தலைமையகத்தில் 2 காவல் கண்காணிப்பாளர்களும், சென்னை பெருநகரக் காவலில் ஒரு துணை ஆணையாளரும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளரும் (செங்கல்பட்டு, திருப்பூர், நீலகிரி, நாமக்கல், திருவாரூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி,

சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் கரூர் நீங்கலாக) மற்றும் ஒவ்வொரு மாநகரத்திலும் ஒரு கூடுதல் துணை ஆணையாளரும் (சென்னை பெருநகர் – தெற்கு மண்டலம் நீங்கலாக) கண்காணித்து வருகின்றனர்.

இப்பிரிவின்கீழ் 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும், 32 ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவுகளும், 7 புலன் விசாரணைப் பிரிவுகளும், 43 குழந்தைகள் கடத்தல் தடுப்புப் பிரிவுகளும் மற்றும் 39 சிறப்பு இளஞ்சிறார் காவல் பிரிவுகளும், 194 காவல் நிலையங்களில் சிறார் நட்பு அறைகளும், 1,542 குழந்தைகள் நல காவல் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் புலன் விசாரணை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்காக, நிலையான வழிகாட்டு நெறிமுறையுடன் (SOP) சிறப்புப் பயிற்சி ஒன்று

நீதித்துறை அதிகாரிகள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட்டது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 28 விழிப்புணர்வு காணொளிகள் இப்பிரிவு அதிகாரிகளால் உருவாக்கப்பட்டு, அவை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது. மக்கள் கூடும் பொது இடங்கள், திரையரங்குகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகளில் அவை ஒளிபரப்பப்பட்டன.

காணாமல் போன மற்றும் தவறாக பயன்படுத்தப்படும் குழந்தைகளுக்கான தேசிய மையத்திலிருந்து இதுவரை 13,930 இணையதள தகவல் அறிக்கைகள் பெறப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், 11,778 மகளிர் உதவி எண் அழைப்புகள் (1091), 39,758 குழந்தைகள் உதவி எண் அழைப்புகள் (1098), 96,318 பாலியல் துன்புறுத்தல் அழைப்புகள்

(181), 7,508 மூத்த குடிமக்கள் உதவி எண் அழைப்புகள் (14567) ஆகியவை பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## XIV. ஆயுதப் படை

ஆவடியில் உள்ள படைக்கல மையம் மற்றும் சிறு ஆயுதக் கிடங்கு உட்பட மாநிலத்தில் 15 தமிழ்நாடு சிறப்பு காவல் படை அணிகள் உள்ளன. தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 8-ஆம் அணியானது புதுதில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் சிறப்புப் பணி மேற்கொண்டு வருகிறது. தேர்தல் பணிகள் உட்பட முக்கிய சட்டம் மற்றும் ஒழுங்கு பாதுகாப்பு பணிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும், பிற மாநிலங்களிலும் தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.08.2022 அன்று திருச்சியில் உள்ள தமிழ்நாடு

சிறப்பு காவல் படையின் முதலாம் அணிக்கான புதிய நிர்வாகக் கட்டிடத்தை திறந்து வைத்தார். 21.10.2022 அன்று, காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் பயன்பாட்டிற்காக 400 மீட்டர் ஓடுதளம் கொண்ட விளையாட்டு மைதானம் திறந்துவைக்கப்பட்டது.

மெரினா கடற்கரையில் உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் மணிமுத்தாறு 12-ஆம் அணியானது, கடல் அலையில் சிக்கி மூழ்கவிருந்த பலரின் உயிரை காப்பாற்றியுள்ளது.

2022-ஆம் ஆண்டில் திகார் சிறைச்சாலையில் மேற்கொண்ட திறமையான சோதனை நடவடிக்கையின்போது, 414 கைபேசிகள், 25 கிலோ புகையிலை/போதை மருந்துகள், 909 கைபேசி சாதனங்கள் மற்றும் 2,935 இதர பொருட்கள் என மொத்தம் ரூ.1,55,928/- மதிப்புள்ள பொருட்கள்

குற்றவாளிகள் / சிறைவாசிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

## XV. அரசு இருப்புப் பாதை காவல் படை

அரசு இருப்புப் பாதை காவல் படையானது கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில், இரண்டு இருப்புப் பாதை மாவட்டங்கள் உள்ளன. சென்னை மற்றும் திருச்சியில் தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் இருப்புப் பாதை மாவட்டங்கள் காவல் கண்காணிப்பாளர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இரயில் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலைநாட்டவும், குற்றங்களை தடுக்கவும் உள்ளூர் காவல்துறையினருடன் இணைந்து திறமையாக செயலாற்றி வருகிறது. இரயில் பயணிகளின் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. விரைவு இரயில்களில் இரயில்வே காவல்துறையினர் ரோந்துப் பணியை மேற்கொள்கிறார்கள். 2022–ஆம்

ஆண்டு, குற்றங்களை தடுத்தல், இரயில் பயணிகளுக்கு உதவி செய்தல் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஆகியன குறித்து 22,213 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டு, அவற்றின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரயில் நிலைய வளாகங்களில் நாச வேலை தடுப்பு சோதனைகள் செய்ய அதிநவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஐந்து மோப்ப நாய்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இரயிலில் பயணம் செய்யும் அதிமுக்கிய நபர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

கடந்த 28.03.2022 முதல் 27.04.2022 வரை "ஆபரேசன் கஞ்சா 2.0" நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையில், போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 63 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 568.55 கிலோ கன்னாபீஸ் என்ற போதைப் பொருள் பறிமுதல்

செய்யப்பட்டது. இதுதொடர்பாக 30 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 12.12.2022 முதல் 31.12.2022 வரை நடத்தப்பட்ட "ஆபரேசன் கஞ்சா 3.0" நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையில், போதை மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 168.95 கிலோ கன்னாபீஸ் என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டு, இதுதொடர்பாக 14 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

சென்னை இருப்புப் பாதை காவல் மாவட்டங்களில் இரயில் நிலைய வளாகங்களில் தனியாக தவித்த 150 பெண் குழந்தைகள் உட்பட 1,267 சிறார்கள் மீட்கப்பட்டனர். இவர்களில் 75 சிறார்கள் அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். 1,192 சிறார்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் மூலம்

மாவட்ட குழந்தைகள் நலக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### XVI. சிறப்பு இலக்குப் படை (STF)

சிறப்பு இலக்குப் படையானது காவல்துறை தலைவர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில் 2 காவல் கண்காணிப்பாளர்கள், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 4 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 9 காவல் ஆய்வாளர்கள், 27 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 198 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படையானது ஆயுதம்தாங்கிய உயரடுக்கு வன பாதுகாப்புப் படையாக செயல்பட்டு வருகிறது. வனச் சரணாலயங்களில் சுற்றுச்சூழலை காக்கவும், மலைவாழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கவும் இப்படை செயல்பட்டு வருகிறது.

இப்படை, நிர்வாகம், செயலாக்கம், நுண்ணறிவு மற்றும் பயிற்சி ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும். இப்படை மாநிலத்தில் 20 மாவட்டங்களில், 10 செயல் முகாம்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படை, சுமார் 21,767 சதுர கி.மீ. கொண்ட மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளை பாதுகாத்து வருகிறது.

தமிழ்நாடு சிறப்பு இலக்குப் படை மற்றும் கேரள மாநில சிறப்பு செயலாக்க குழுமம் ஆகியவை இணைந்து மூன்று மாநிலங்கள் சந்திக்கும் முச்சந்திப்பில் "Operation OWL–I" என்ற மூன்று நாள் கூட்டு தேடுதல் வேட்டையை 16.12.2022 முதல் 18.12.2022 வரை வெற்றிகரமாக மேற்கொண்டது.

20 மாவட்டங்களில், மொத்தம் 528 தேடுதல் பாதைகள், 696 முக்கிய இடங்கள், மலை/விளிம்பு கிராமங்களில் வசித்து வரும் 146 குடும்பத்தினர் மற்றும் 2,538 கிராமங்கள் / குக்கிராமங்கள் அடையாளம்

காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு இலக்குப் படையால் 20 மாவட்டங்களில் மூன்று நாள் தேடுதல் வேட்டைகள் என்ற நடவடிக்கை மொத்தம் 428 தடவைகள் நடத்தப்பட்டுள்ளன.

அண்டை மாநிலங்களில் இடதுசாரி தீவிரவாதிகள் நடமாட்டமுள்ள இடங்கள் மற்றும் தேடுதல் பாதைகள் கூகுள் மேப்பில் சேர்க்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளது. பழங்குடியினர் மற்றும் விளிம்பு நிலை கிராம மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கத்துடன், சிறப்பு இலக்குப் படை 42 நல்வாழ்வு முகாம்களை நடத்தி, 1,720 குடும்பங்கள் பயன்படும் வகையில் ரூ.19.70 லட்சம் மதிப்பில் அடிப்படைத் தேவையான பொருட்களை வழங்கியுள்ளது.

சிறப்பு இலக்குப் படையால் 111 பழங்குடி கிராமங்களிலிருந்து அடிப்படை வசதிகள் கோரும் 237 கோரிக்கை மனுக்கள் மற்றும் 118 குறைதீர்

மனுக்கள் பெறப்பட்டு, அவற்றை தீர்த்து வைக்க சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள "முதல்வரின் முகவரி துறை" தனி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், வனத் துறையுடன் இணைந்து நெகிழிக்கு எதிராக 33 விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**XVII. செயலாக்கப் பிரிவு**

தமிழ்நாடு அதிதீவிரப்படை மற்றும் தமிழ்நாடு அதிதீவிரப்படை பயிற்சிப் பள்ளி ஆகியவை செயலாக்கப் பிரிவின் கீழ் இயங்கி வருகின்றன. காவல்துறை கூடுதல் இயக்குநரின் தலைமையில் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு அதிதீவிரப்படை**

இப்படை காவல் கண்காணிப்பாளரின் கீழ் இயங்கி வருகிறது. இதில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் ஆய்வாளர்கள்,

23 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 257 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அதிதீவிரப்படையானது முதன்மையாக பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு அதிதீவிரப்படையை மேம்படுத்தவும், தாக்குதல் திறனை அதிகரிக்கவும், நவீன ஆயுதங்கள், வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்பு சாதனங்கள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்களை கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு ரூ.57.55 கோடி நிதி ஒதுக்க ஒப்பளிப்பு அளித்துள்ளது.

**தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி**

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளியானது காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இதில், 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், 1 காவல் துணை கண்காணிப்பாளர், 11 காவல்

ஆய்வாளர்கள், 22 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 90 இதர ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி, தனது பயிற்சி மையத்தின் மூலமாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அதிதீவிரப்படை பயிற்சி, துப்பாக்கி சுடும் பயிற்சி, ஆயுதம் மற்றும் சூழ்ச்சிகளை கையாளும் பயிற்சி, மேம்படுத்தப்பட்ட வெடிபொருள் சாதனம் தொடர்பான பயிற்சி ஆகிய சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2022–ஆம் ஆண்டு, தமிழ்நாட்டின் பிற துறைகளிலிருந்து (ஊர்க்காவல்–152, சிறைத்துறை–49) 201 நபர்கள் மற்றும் பிற மாநில காவலர்கள் 170 நபர்கள் என மொத்தம் 5,665 காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளியில், 923 பயிற்சி உதவி ஆய்வாளர்கள் மற்றும் 78 நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் துணை

கண்காணிப்பாளர்களுக்கு ஆயுதங்களை கையாளுதல் மற்றும் துப்பாக்கி சுடுதல் பயிற்சியும், 9,669 புதிதாக நியமிக்கப்பட்ட காவலர்களுக்கு அதிதீவிரப்படை, வெடிகுண்டுகளை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை பயிற்சிகளும் அளிக்கப்பட்டன.

**தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை**

தமிழ்நாடு சிறப்புப்படை 13–ஆம் நிறுமத்தை மாற்றியமைத்து தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை உருவாக்கப்பட்டது. இந்தப் படையானது மாநிலத்தில் இயற்கை பேரழிவுகள் மற்றும் மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரிடர்களின்போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை கையாளுவதற்காக செயலாக்கப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மைப் பணிகளில் காவலர்களுக்கு பயிற்சியளிக்கவும், உபகரணங்களை வாங்கவும்

ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையில் 610 காவலர்களுக்கு அடிப்படை பேரிடர் மேலாண்மை பாடங்களில் பயிற்சியளிக்கப்பட்டு, அவர்களுள் 330 காவலர்கள் சிறப்பு பேரிடர் மேலாண்மை பயிற்சியை முடித்துள்ளனர்.

மேலும், சிறப்பு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.10.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆண்டு பயிற்சி நாட்காட்டியின்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒத்திவாக்கம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வல்லநாடு ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகளில் முதன்மையாக செயலில் இறங்கும்

காவலர்கள் மற்றும் ஊர்க்காவல் படை வீரர்களின் சிறப்பு திறன்களை மேம்படுத்த, முதற்கட்ட மருத்துவ உதவிகள் வழங்குதல், கட்டிட இடிபாடுகளுள் சிக்கியவர்களை தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் வெள்ள மீட்புப் பணிகள் போன்றவற்றில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022–ஆம் ஆண்டு மாண்டஸ் புயலின்போது, 400 காவலர்களை உள்ளடக்கிய தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவின் 17 குழுக்கள், 07.12.2022 முதல் 16.12.2022 வரை மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டன.

**விரைந்து செயல்படும் குழு (QRT)**

விரைந்து செயல்படும் குழுவானது தனித்தும், மத்திய ஆயுதப் படையுடன் இணைந்தும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் அணுமின் நிலையங்கள், பெட்ரோலிய எரிவாயு கிடங்குகள்,

முக்கிய கோவில்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள் போன்ற தாக்குதல் நடத்தப்படக்கூடிய முக்கிய இடங்களில் வேவுபார்த்தல் மற்றும் ஒத்திகை பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**23வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள்–2022**

அகில இந்திய காவலர் பணித்திறன் போட்டிகளின் ஒரு பகுதியாக, 23வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள்–2022, தமிழ்நாடு காவல்துறையால் ஒத்திவாக்கத்தில் உள்ள தமிழ்நாடு அதிதீவிரப் பயிற்சிப் பள்ளி / துப்பாக்கி பயிற்சி வளாகத்தில் 09.01.2023 முதல் 13.01.2023 வரை நடைபெற்றது. சுமார் 800 காவல் அதிகாரிகள் / காவலர்கள் கொண்ட 32 அணிகள் (22 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் மற்றும் 8 மத்திய ஆயுதப்படைப் பிரிவுகள் / மத்திய காவல் அமைப்புகள்) இந்தப் போட்டிகளில் பங்கேற்றன.

இப்போட்டிகளில் தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடும் அணி கைப்பற்றிய கோப்பைகளின் விவரம் பின்வருமாறு:–

i. மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளில் ஒட்டுமொத்தமாக சிறப்பாக செயல்பட்டதற்கான வெற்றிக் கோப்பை (முதல் இடம்).

ii. கைத்துப்பாக்கி / ரிவால்வர் சுடுவதில் இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2வது சிறந்த அணி).

iii. கார்பைன் / ஸ்டென்கன் சுடுவதில் இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2வது சிறந்த அணி).

iv. ஒட்டுமொத்தமாக இரண்டாம் இடத்திற்கான கோப்பை (2வது இடம்) ஆகியவற்றை வென்றுள்ளது.

13.01.2023 அன்று சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடந்த நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

## தமிழ்நாடு காவல் விளையாட்டு வீரர்களின் சாதனைகள்

| வ எண் | போட்டி/நிகழ்ச்சி | பதக்கங்கள் | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1. | ஹரியானாவில் உள்ள பாணுவில் நடைபெற்ற 40வது அகில இந்திய குதிரையேற்றப் போட்டி– 2021–22 | 03 | 02 | 01 |
| 2. | நெதர்லாந்து நாட்டில் ரோத்தர்தாம் நகரில் நடைபெற்ற 2022 உலக காவல் மற்றும் தீயணைப்பு போட்டிகள் | 13 | 09 | 03 |
| 3. | செங்கல்பட்டு ஒத்திவாக்கத்தில் உள்ள துப்பாக்கி சுடும் களத்தில் நடைபெற்ற 23வது அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டிகள் – 2022 | 01 | 02 | 02 |
| 4. | மகாராஷ்டிரா மாநிலம் பூனாவில் நடைபெற்ற 71வது அகில இந்திய காவல் மல்யுத்த போட்டிகள் – 2022 (மல்யுத்தம், பளுதூக்குதல், குத்துச்சண்டை, கட்டழகு உடல் போட்டி, கபடி மற்றும் தோள் மல்யுத்தம்) | 03 | 08 | 09 |
| 5. | ஹைதராபாத்தில் உள்ள கட்சிபௌலி அரங்கில் நடைபெற்ற 5வது தேசிய மாஸ்டர்ஸ் விளையாட்டுப் போட்டிகள் | 09 | 06 | – |

## XVIII. கடலோரப் பாதுகாப்புக் குழுமம்

இப்பிரிவு ஒரு கூடுதல் காவல் இயக்குநர் தலைமையில், அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல் துணைத் தலைவர் மற்றும் நாகப்பட்டினம், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளர்களோடு செயல்பட்டு வருகிறது. இக்குழுமத்தில், 1 தளவாய், 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 4 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 11 காவல் ஆய்வாளர்கள், 54 காவல் உதவி ஆய்வாளர்கள், மற்றும் 634 இதர காவல் ஆளிநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் வரையில் தமிழக கடலோரப் பகுதிகளில் 42 கடல்சார் காவல் நிலையங்களும், 98 சோதனைச் சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன. இச்சோதனைச் சாவடிகளில் ஆயுதம் தாங்கிய தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் பணியாற்றி வருகின்றனர்.

**துரித இடைமறிப்புப் படகுகள்**

கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தால் தலா 12 எண்ணிக்கையில், 12 டன் மற்றும் 5 டன் துரித இடைமறிப்புப் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படகுகளில் இலகுரக இயந்திர துப்பாக்கிகளை (LMG) இயக்கும் வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ரோந்து படைகளுக்கு INSAS ரக துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்தபடி, துரித இடைமறிப்புப் படகுகளின் வருடாந்திர பராமரிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்காகவும் (CAMC), வழக்கமான பராமரிப்பிற்காகவும், தமிழ்நாடு அரசு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. விரிவான வருடாந்திர பராமரிப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் (CAMC) மேற்கொள்ள நிறுவனங்களை இறுதி செய்வதற்கான நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

09.07.2022 ஆம் தேதி முதல் 15.07.2022 தேதி வரை சென்னை துறைமுகத்திலிருந்து ராமேஸ்வரம் வரையிலும், ராமேஸ்வரத்திலிருந்து சென்னை துறைமுகம் வரையிலும் (500 கடல் மைல்கள்) 24 பயிற்றுவிக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புக் குழும ஆளிநர்கள் கொண்ட ஒரு கடற்பயணத்தை கடலோரப் பாதுகாப்புக் குழுமம் ஏற்பாடு செய்தது. இக்கடற் பயணத்திற்காக பிரெஞ்சுத் தயாரிப்புகளான மூன்று J80 ரக படகுகள் பயன்படுத்தப்பட்டன. படைத்துறை சாராத காவல் படையால் மேற்கொள்ளப்பட்ட உலகின் நீளமான கடற்பயணங்களில் இப்பயணமும் ஒன்று என்று உலக மற்றும் ஆசிய சாதனைப் புத்தகங்களில் இப்பயணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடலோர பாதுகாப்பு, கடலோரத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் பாதுகாப்பு மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகள் ஆகியவை குறித்த 'ஒரு நாள் கருத்தரங்கு' ஒன்றை

கடலோரப் பாதுகாப்புக் குழுமம் 26.09.2022 அன்று நடத்தியது.

## மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் உருவாக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்ததிற்கிணங்க மெரினா கடற்கரையில் கூடும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், மக்கள் கடலில் மூழ்கும் நிகழ்வுகளைத் தடுப்பதற்காகவும் மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த மையத்திற்கு இயந்திரங்கள், வாகனங்கள் வாங்குவதற்காகவும், மனித ஆற்றலுக்காகவும் அரசு ரூபாய் 2.6 கோடி ஒதுக்கியுள்ளது. மெரினா உயிர் பாதுகாப்பு மையம் 01.10.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. மெரினா கடற்கரை உயிர் பாதுகாப்பு மையம் துவங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 82 பேர் கடலில் மூழ்குவதிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

**கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

பல்வேறு தருணங்களில் கடலோர பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளையும், சிறு பிரச்சனைகளையும் கண்டறியும் பொருட்டு கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. 2022–ஆம் ஆண்டு, 28.06.2022 மற்றும் 29.06.2022 ஆகிய நாட்களில் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையால் ஒருங்கிணைந்த கடலோரப் பாதுகாப்புப் பயிற்சி 'சாகர் கவட்ச்–01/2022' என்ற பாதுகாப்பு நடவடிக்கையும், 15.11.2022 மற்றும் 16.11.2022 ஆகிய நாட்களில் இந்திய கடற்படையால் கடலோரப் பாதுகாப்பு படை "சீ–விஜில்" (Sea Vigil 02/2022) என்ற பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டன.

**மீனவர்கள் மற்றும் படகுகள் மீட்புப்பணி**

கடலோரப் பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் துயர் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக 1093 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் 24 மணி நேரமும்

செயல்பட்டு வருகிறது. 2022–ஆம் ஆண்டு இந்த எண்ணிற்கு மொத்தம் 46 அழைப்புகள் வந்துள்ளன. கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (MRCC) உடனும் மற்றும் உள்ளூர் மீன்வளத் துறை அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து கடலோரப் பாதுகாப்புக் குழும ஆளிநர்கள் 27 மீனவர்களையும், 7 படகுகளையும் ஆபத்திலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

**சிறப்பு மற்றும் உள்ளூர் சட்டங்களை அமல்படுத்துதல்**

01.01.2022 முதல் 31.12.2022 ஆகிய காலகட்டங்களில், 802.08 கிலோ கஞ்சா, 14,690 கிலோ ரேஷன் அரிசி, 3,625 லிட்டர் ரேஷன் மண்ணெண்ணெய், 2,726 கிலோ கடல் அட்டைகள், 260 கிலோ ஏலக்காய், 3,770 கிலோ பீடி இலைகள் மற்றும் 1,596 கிலோ மஞ்சள் கிழங்குகள் ஆகியன கடலோரப் பாதுகாப்புக் குழுமத்தால் பறிமுதல் செய்யப்பட்டன. கடலோரக் காவல் படையினர் அவ்வப்போது மேற்கொள்ளும் இத்தகைய

பறிமுதல்களால் கடத்தல் செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளன.

01.01.2022 முதல் 31.12.2022 வரையுள்ள காலகட்டத்தில், கடலோர மற்றும் கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, இந்திய கடவுச்சீட்டு சட்டம் 1967, வெளிநாட்டவர்கள் சட்டம் 1946, ஆயுதச் சட்டம் 1959, வெடிமருந்து பொருட்கள் தடைச் சட்டம் 1908 மற்றும் இந்திய கடலோர மண்டலங்கள் (மீன்பிடி இயந்திரங்கள் முறைப்படுத்துதல்) சட்டங்கள் 1981 ஆகிய சட்டங்களின்கீழ் 174 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடலோர காவல் படையினரின் பணிகளில் குறிப்பாக கடலோரப் பாதுகாப்புக் குழும பணிகளில் உதவி செய்வதற்காக 300 ஊர்க்காவல் படை ஆளிநர்களை கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ கிராமங்களில் இருந்து தேர்வு செய்ய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை 186 பேர் தேர்வு

செய்யப்பட்டு, 45 நாட்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அதில் 150 ஊர்க்காவல் படையினர் கடலோரக் காவல் குழுமத்தில் பணியமர்த்தப்பட்டுவிட்டனர், மீதமுள்ள 36 ஊர்க்காவல் படையினர் இன்னும் கடலோரக் காவல் குழுமத்தில் பணியில் சேர வேண்டி உள்ளது.

கடலூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மையங்களில் 120 மீனவர்களின் வாரிசுகள் அவர்கள் தங்களின் அறிவு மற்றும் உடல் ஆற்றலை இந்திய கடற்படை/இந்திய கடல் பாதுகாப்புப் படை மற்றும் இதர பாதுகாப்புப் படைகளில் சேரும் வகையில் திறன் மேம்பாடு அடைவதற்காக அவர்களுக்கு (இலவச தங்குமிடம், பயிற்சி உபகரணங்கள், உதவித்தொகையுடன் கூடிய) 3 மாத பயிற்சி 14.03.2022 முதல் 14.06.2022 வரை வழங்கப்பட்டது. இரண்டாவது குழுவுக்கு இப்பயிற்சி விரைவில் தொடங்கப்பட இருக்கிறது.

## XIX. ஊர்க்காவல்படை மற்றும் குடிமக்கள் பாதுகாப்பு

தன்னார்வ அமைப்பான தமிழ்நாடு ஊர்க்காவல்படை அமைப்பானது காவல் துறையினருக்கு உதவி செய்யவும், மாநிலத்தின் பாதுகாப்பை பராமரிக்கவும், வெள்ளம், தீ அல்லது பெருநோய் தொற்று காலங்களில் பொதுமக்களுக்கு சிகிச்சை மற்றும் முதலுதவி வழங்குவதிலும் போக்குவரத்தை சீர்படுத்துவதிலும் உதவுகிறது. இந்த அமைப்பு 2085 பெண்கள் உள்ளிட்ட 15,922 ஊர்க்காவல்படையினரால் செயல்பட்டு வருகிறது.

இந்த ஊர்க்காவல் படை அமைப்பினருக்கு இயற்கை பேரிடர்கள் ஏற்படும்போது பொதுமக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் மற்றும் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்த தற்காப்பு ஒத்திகை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

2022–ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலின்போது, மொத்தம் 12,321 ஊர்க்காவல் படையினர் காவல்துறையினருடன் இணைந்து பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு, உள்ளாட்சி தேர்தல் அமைதியாக நடைபெறுவதற்கு செய்த உதவி அனைவராலும் பாராட்டப்பட்டது.

2022–ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை காலகட்டத்தில் கடலோர மாவட்டங்களில் உள்ள ஊர்க்காவல் படையினர் அந்தந்த மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையினருடன் இணைந்து மீட்புப்பணிகளில் துரிதமாக ஈடுபட்டனர்.

2022–ஆம் ஆண்டில் பல்வேறு மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களில் புதிதாக கிட்டத்தட்ட 600 ஊர்க்காவல் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், முக்கிய மற்றும் மிகமுக்கிய நபர்கள் பாதுகாப்பு பணி, கோவில் திருவிழாக்கள் பாதுகாப்பு பணி, தீபாவளி, பொங்கல் மற்றும் இதர பண்டிகை

தினங்களிலும் உள்ளூர் காவல்துறையினருடன் இணைந்து ஊர்க்காவல் படையினர் தன்னலமின்றி செயல்பட்டு, மிக சிறப்பாக பாதுகாப்பு பணிகளை செய்து வருகிறார்கள். பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியின்போது மெச்சத்தக்க வகையில் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

300 மீனவ இளைஞர்களை ஊர்க்காவல் படையில் இணைத்து 10 கடலோர மாவட்டங்களில் கடலோர பாதுகாப்பு குழுமத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

2022–2023 ஆம் நிதியாண்டில் ரூ.56.27 கோடியை ஊர்க்காவல் படையினருக்கு ஊதியமாக வழங்க அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

## XX. சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு

சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவானது, ஒரு காவல் துறைத் தலைவர் தலைமையில், ஒரு

உதவி காவல்துறைத் தலைவர், 38 துணை கண்காணிப்பாளர்கள், 06 காவல் ஆய்வாளர்கள், 66 காவல் உதவி ஆய்வாளர்கள், 147 காவல் ஆளிநர்கள், 37 சிறப்பு பணியாளர்கள் மற்றும் 28 அமைச்சுப் பணியாளர்களை கொண்டு இயங்கி வருகிறது.

பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளை தடுக்க இப்பிரிவு உருவாக்கப்பட்டது. தற்போது மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் 44 சமூக நீதி மற்றும் மனித உரிமை அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற சமூகத்தினரிடையே உள்ள இடைவெளியை நீக்குவதற்காக சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவினர் தத்தமது எல்லைக்குள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை "சமூக நீதி" கூட்டம் நடத்தி வருகின்றனர்.

காவல் துணை கண்காணிப்பாளர்கள்/ காவல் உதவி ஆணையாளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி, அவற்றின் செயல்முறைகளை, புகைப்படங்களுடன் அனுப்பி வருகின்றனர். 2022–ஆம் ஆண்டு 988 சமூக நல்லிணக்க மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**நிதி நிவாரணம்**

வன்கொடுமையினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிதி நிவாரணம் அளிப்பதற்கான கருத்துருக்களை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு விரைந்து முன்னெடுத்து வழங்கி வருகிறது. 2021 மற்றும் 2022–ஆம் ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிதி நிவாரணம்:

| வ. எண் | ஆண்டு | வழக்குகள் எண்ணிக்கை | பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2021 | 2,750 | 4,056 | 38.62 |
| 2 | 2022 | 1,852 | 2,883 | 32.97 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பின்படி, "சமத்துவம் காண்போம்" என்ற பெயரில் சென்னையில் உள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு அரசு ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

## XXI. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புப் பிரிவு

போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புப் பிரிவானது, ஒரு காவல் துறை தலைவர் தலைமையில், 1 காவல் துணை கண்காணிப்பாளர், 1 காவல் ஆய்வாளர், 2 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 2 காவல் ஆளிநர்களை தலைமையகத்தில் கொண்டு இயங்கி வருகிறது.

விபத்துக்களின்போது சம்பவ இடத்திற்கு விரைந்து செல்லவும், பாதிக்கப்பட்ட மற்றும் விலைமதிக்க முடியாத மனித உயிர்களைக் காப்பாற்றிடவும் பொன்னான உயிர் காக்கும்

மேலாண்மை திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் 31,512 வழக்குகளை கையாண்டு சிறப்பான பணியை செய்துள்ளது .

உடல் மற்றும் வாகனங்களில் பொருத்தப்படக்கூடிய புகைப்படக் கருவிகள், மூச்சு பகுப்பாய்வு கருவி, வேக ஒளிமி துப்பாக்கிகள் மற்றும் உயர்வேக அதிர்வெண் கருவிகள் போன்றவற்றின் கொள்முதல் செயல்முறையில் உள்ளது.

உலக வங்கியின் கடன் நிதியுதவியுடன் கூடிய தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் திட்டம் 2-ன் கீழ் கிழக்கு கடற்கரைச் சாலை, அக்கரையிலிருந்து மாமல்லபுரம் வரையில் தானியங்கி வேகக் கட்டுப்பாட்டுடன் இணைந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து மேலாண்மை திட்டம்-II ஏற்படுத்தப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு பிரிவு மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு

தேவையான தரவுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

சாலை விபத்து தரவு 2009 ஆம் ஆண்டு முதல் RADMS பயன்பாட்டில் பதிவு செய்யப்படுகிறது. 15.02.2021 அன்று, புதுடெல்லியிலுள்ள இந்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம், iRAD பயன்பாட்டை அறிமுகப்படுத்தியது. இது CCTNS மற்றும் தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைகள் மற்றும் சுகாதாரத்துறைகள் தொடர்புடைய போக்குவரத்து இணையதளங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

சாலை விபத்து தரவு மேலாண்மை திட்டத்தில் (RADMS) இருந்து ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவு தளத்திற்கு (iRAD) மாற்றுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

iRAD பயன்பாடு RADMS பயன்பாட்டைவிட கணக்கிடக்கூடிய நன்மைகளை கொண்டுள்ளது.

ஏனெனில் இது ஒரு PAN India திட்டம் மட்டுமல்லாது, நாடு முழுவதும் சாலை விபத்து தரவுகளின் ஒரே ஆதாரமாக விளங்குகிறது.

iRAD மென்பொருள் தகவல் பகிர்வு மற்றும் விரைவான நடவடிக்கைக்காக காவல் துறை, போக்குவரத்துத்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சுகாதாரத்துறை போன்ற பங்குதாரர் துறைகளை ஒருங்கிணைக்கிறது. சாலை விபத்துக்கள் பற்றிய தேவையான தரவுகள், குற்றம் நடந்த இடத்தின் பூகோள அமைப்பு மற்றும் புகைப்படம் / வீடியோ / குரல் பதிவு உள்ளிட்டவை iRAD மென்பொருள் மூலம் பதிவேற்றம் செய்யப்படலாம்.

iRAD மென்பொருளில் பரிவாகன் தரவு மூலம் வாகன பதிவு விவரங்களை இணையதளத்தில் பெறலாம். அறிக்கைகளை வரைகலை வரைபடத்தில் பார்வையிடலாம்.

## XXII. மாநில குற்ற ஆவண காப்பகம்

காவல் அமைப்பின் செயல்திறனை மேம்படுத்தவும், குற்ற ஆவண முறையை மேம்படுத்தவும் மாநில குற்ற ஆவண காப்பகம் உருவாக்கப்பட்டது. மாநில குற்ற ஆவண காப்பகமானது, ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில், 2 கண்காணிப்பளர், 15 கூடுதல் கண்காணிப்பாளர், 44 துணை கண்காணிப்பாளர், 66 ஆய்வாளர்கள், 215 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 75 இதர பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

மாநில குற்ற ஆவண காப்பகத்தில் காவல் கணினி பிரிவு, விரல் ரேகை பதிவுக் கூடம், குற்ற செயல்முறை கண்டறியும் பிரிவு மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இக்காப்பகம் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறையினை (CCTNS) பெற்று, முகமையாக செயல்பட்டு வருகிறது.

**காவல் கணினி பிரிவு**

காவல்துறை கணினிப் பிரிவு (PCW) 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இப்பிரிவு, காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. கணினிமயமாக்கலின் நோக்கம் அனைத்து குற்றம் மற்றும் குற்றவியல் தரவுகளையும் பதிவு செய்வது, விசாரணையில் உதவுவது மற்றும் குற்ற பகுப்பாய்வுக்கான புள்ளிவிவரங்களை தொகுத்து சேகரிப்பது ஆகும். காவல்துறை கணினிப் பிரிவு பின்வரும் செயல்பாடுகளைச் செய்கிறது:–

- CCTNS & ICJS ஐ நடைமுறைப்படுத்தும் இணைப்பு முகமையாக செயல்பட்டு வருவது.
- CPBS–ஐ பயன்படுத்தி உருவப்படங்களை உருவாக்குதல்.
- CPBS இல் மாவட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- இந்தியாவில் குற்றத்திற்கான தரவுகளை தொகுத்தல்.

- க்ரைம் ரிவியூ தமிழ்நாடு வெளியிடல்.
- மாதாந்திர SCRB Digest–ஐ வெளியிடல்.

ஸ்மார்ட் காவலர் (e–Beat) செயலி தமிழ்நாடு அரசால் 15.10.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் 100 சதவிகித இணையதள சேவை அளிக்கும் வகையில், VPN BB **மற்றும்** 3G GSMக்கு பதிலாக BSNL நிறுவனத்தின் MBLS இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**முக அடையாளம் கண்டறியும் தொழில்நுட்பம் (FRS)**

முக அடையாளம் கண்டறியும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 04.10.2021 முதல் 722 காவல் சரிபார்ப்பு விண்ணப்பங்கள், 336 கடவுச்சீட்டு சரிபார்ப்பு விண்ணப்பங்கள், 132 சந்தேக நபர்கள் மற்றும் 3,891 குற்றவாளிகள் மீது

குற்ற வழக்குகள் உள்ள விவரம் கண்டறியப்பட்டுள்ளது.

**பொதுமக்களுக்கான இணையதள சேவைகள்**

இச்சேவை துவக்கப்பட்டதிலிருந்து 31.12.2022 வரை, இணையதள சேவை மூலம் 11,04,409 இணையதள புகார்கள் பதிவாகியுள்ளன. 11,98,336 காணாமல்போன ஆவண அறிக்கைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. 4,33,713 சாலை விபத்து வழக்கு தொடர்பான ஆவணங்கள் பாதிக்கப்பட்டவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 11,98,805 இணையவழி காவல் சரிபார்ப்பு விண்ணப்பங்கள் குடிமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. 6,49,056 சாட்சிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணைகள் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

**காவல்துறைக்கான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பின் (CCTNS) பயன்பாடு**

இச்சேவை துவக்கப்பட்டதிலிருந்து 31.12.2022 வரை, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பின் (CCTNS) தரவுகளைப் பயன்படுத்தி, 1,125 காணாமல் போனவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அடையாளம் தெரியாத பிரேதங்களின் விவரத்துடன் ஒப்புநோக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 70 காணாமல் போன நபர்கள் உயிருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 1,365 காணாமல் போன வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 16,235 பாஸ்போர்ட் விண்ணப்பதாரர்கள், 4,164 முன் நடத்தைகள் மற்றும் 27,183 காவல் சரிபார்ப்பு விண்ணப்பதாரர்கள் மீது குற்ற வழக்குகள் உள்ள விவரம் CCTNS மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**CCTNS 2.0**

அடுத்த ஐந்து நிதியாண்டுகளில் (2022–2023 முதல் 2027–2028 வரை) குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் அமைப்பு – 2.0 திட்டத்தை நிறுவிட தமிழ்நாடு அரசு ரூ.124.38 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. எல்காட் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தேர்வில், இப்புதிய திட்ட ஒருங்கிணைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

01.02.2021 அன்று, ELCOT நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கோரியதுடன், 27.10.2022 அன்று, பணி உத்தரவு வழங்கப்பட்டது. இத்திட்டமானது, பணி முடிக்கப்பட்டு ஜூலை 2023 முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**CCTNS 2.0–ன் நன்மைகள்**

ஆன்லைன் புகார்கள் CSR மற்றும் FIR முகமைகளுடன் இணைக்கப்படும், அதாவது, காவல் நிலையங்கள் ஆன்லைன் புகாரை CSR அல்லது FIR ஆக அதே முகமையில் நேரிடையாக பதிவு செய்வதும், அவ்வாறு மாற்றம் செய்யும் அதே வேளையில், CSR அல்லது FIR இன் அடுத்தடுத்த மைல்கற்கள் புகார்தாரருடன் தேவையான நேரத்தில் பகிரப்படும்.

குடிமக்களுக்கான முகமையில் உள்ள குற்றப்பத்திரிகை / இறுதி அறிக்கைவரை குடிமக்கள் பார்க்க முடியும். அதாவது, நீதிமன்றத்தால் ஒதுக்கப்பட்ட சிசி எண்/எஸ்சி எண் போன்றவற்றையும் பார்க்க முடியும்.

நீதிமன்ற எண், E–Court இணையதளத்துடன் இணைக்கப்படும். இதனால் குடிமக்கள் E–Court இணையதளத்தில் வழக்கின் அடுத்த நிலையை பார்க்க முடியும்.

## வெளியீடுகள்

மாநில குற்ற ஆவணக் காப்பகம் ஆண்டுதோறும் "தமிழ்நாடு குற்ற ஆய்வு" என்ற வெளியீட்டை வெளியிடுகிறது. 2021-ஆம் ஆண்டுக்கான "தமிழ்நாடு குற்ற ஆய்வு" வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. மாநிலத்தைப் பொறுத்தவரை மாதாந்திர குற்ற விவரங்கள் அடங்கிய "SCRB Digest" வெளியிடப்படுகிறது. இது ஜனவரி, 2023 வரை வெளியிடப்பட்டுள்ளது.

## விரல் ரேகை பதிவுக் கூடம்

மாநிலத்தில் 47 தனி விரல் ரேகை பதிவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. மேலும், சிறப்பு பிரிவுகளான வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிவற்றில் இரண்டு கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

விரல் ரேகை பதிவுக் கூடத்தில் விரல் ரேகைப் பதிவுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதில்

2,04,839 தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் செயல்படுத்தப்படும் தேசிய தானியங்கி விரல்ரேகை அடையாளம் கண்டறியும் அமைப்பு (NAFIS) 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இது மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்ட விரல் ரேகை பதிவுக் கூடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக செயல்பட்டு, 51 வழக்குகளில் தொடர்புடைய பிற மாநில குற்றவாளிகள் உட்பட 321 வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

2022–ஆம் ஆண்டு, தனி விரல் ரேகை பதிவுக் கூட அலுவலர்கள், 5,536 குற்ற நிகழ்விடங்களுக்குச் சென்று மாதிரிகளை சேகரித்தனர். சம்பவ இடங்களில் பதிவான மாதிரி விரல் ரேகைகள் மூலம்

698 வழக்குகளின் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

**XXIII. தொழில்நுட்பப் பணிகள்**

காவல் வானொலிப் பிரிவானது, இராணுவ உயர்வேக வானொலி சாதனத்துடன் 1948–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர், 1996–ஆம் ஆண்டு அதன் பெயர் காவல் தொழில்நுட்பப் பிரிவு என மாற்றம் செய்யப்பட்டது. தற்போது அது தொழில்நுட்பப் பிணிகள் என அழைக்கப்படுகிறது.

தற்போது, 8892 மிக உயரலை தொடர்பு சாதனங்கள் / மொபைல் சாதனங்கள், 13, 198 மிக உயரலை தொடர்பு கையடக்க கருவிகள், 265 VHF Repeater கருவிகள், 151 VHF DMR Static/ மொபைல் சாதனங்கள், 1419 VHF DMR கையடக்க கருவிகள் மற்றும் 42 VHF DMR Repeater கருவிகள் உள்ளன.

**டிஜிட்டல் மிக உயரலை தொடர்பு சாதனங்களை செயல்படுத்துதல்**

தமிழ்நாடு காவல்துறையில் முதன்முதலாக டிஜிட்டல் மொபைல் வானொலி முறைமையானது, 23.03.2022 அன்று, பெரம்பலூர் மாவட்டத்தில் நிறுவப்பட்டது. DMR தகவல்தொடர்பு என்பது ஸ்பெக்ட்ரம் செயல்திறனுடன் கூடிய பாதுகாப்பான டிஜிட்டல் தகவல்தொடர்பு மற்றும் ஜிபிஎஸ் திறனுடன் பல்முனை இணையவழி இணைப்பாகும். DMR முறையின் கீழ் 69 கையடக்க கருவிகள், 12 நிலையான கருவிகள் மற்றும் 49 மொபைல் கருவிகள் மற்றும் துணைக்கருவிகளுடன் ரூ.37.57 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இதனால் மாவட்டம் முழுவதும் தகவல் தொடர்பு என்பது டிஜிட்டல் தகவல் தொடர்புக்கு மாற்றப்பட்டது. மேலும், தகவல் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக, பச்சமலை ரிப்பீட்டர் நிலையத்தில் சர்ஜ் மற்றும் லைட்னிங் பாதுகாப்பு (SLP) அமைப்புடன் புதிய 30 மீட்டர் கோபுரம்

நிறுவப்பட்டது. மேலும், ஜனவரி 2023-ல் மொத்தம் ரூ.35.99 இலட்சம் மதிப்பில் தற்போதுள்ள 80 மீட்டர் கோபுரத்திற்கு SLP அமைப்பு வழங்கப்பட்டுள்ளது.

16 மாவட்டங்கள், 2 நகரங்கள் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு DMR அமைப்பை செயல்படுத்துவதற்காக ரூ.98.7 கோடியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இதுவரை, 1114 DMR VHF கையடக்க கருவிகள் மற்றும் 61 நிலையான / மொபைல் கருவிகள், 100 DMR UHF கையடக்க கருவிகள் ரூ.3.63 கோடியில் வாங்கப்பட்டுள்ளன. எல்காட் மூலம் கொள்முதல் நடைபெற்று வருகிறது, மேலும் 2023-24 ஆம் ஆண்டில் இத்திட்டம் நிறைவடையும்.

**புதிய அதிஉயரலை திருப்பி நிலையங்கள் நிறுவுதல்**

திருச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மிக உயரலை தொலைத் தொடர்பு சாதனங்களின் தொலைத் தொடர்பை மேம்படுத்துவதற்காக பச்சைமலை மற்றும் பொறையாரில் புதிய

அதிஉயரலை திருப்பி நிலையங்கள் நிறுவப்பட்டன. மேலும், தொலைத்தொடர்பை மேம்படுத்துவதற்காக அறந்தாங்கியில் தற்போதுள்ள மறுஅஞ்சல் நிலையத்தை அரங்கனல் அதிஉயரலை திருப்பி நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

**காவல் உதவி–பெண்கள் பாதுகாப்பு செயலி ஆகியவற்றை ஒன்றிணைத்தல்**

தற்போதுள்ள "காவலன் செயலி" முற்றுலிமாக மாற்றியமைக்கப்பட்டு, அது "காவல் உதவி–பெண்கள் பாதுகாப்பு" செயலியாக மாற்றம் செய்யப்பட்டு, கைப்பேசி புகார் முறை, காவல் நிலைய இருப்பிடம் கண்டுபிடிப்பு, இருப்பிடம் பகிர்தல், வணிகர்களுக்கான உதவி, சமூக ஊடகத் தொடர்பு போன்றவை உள்ளடக்கிய 60–க்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கும் வசதி கொண்டதாக உள்ளது. இச்செயலியானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.04.2022 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், இச்செயலி IOS இயங்குதளத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இச்செயலியில் 2.47 லட்சம் பதிவிறக்கங்கள் செய்யப்பட்டு, 4.7 என நட்சத்திர மதிப்பீடு பெற்றுள்ளது.

**கணினிசார் நிதி மோசடி தொடர்பான அழைப்புகள் கணினிசார் குற்றப் பிரிவு தலைமையகத்திற்கு மாற்றும் வகையில் இணைப்பு**

மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை மற்றும் அவசரகால உதவி மையத்திற்கு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கணினிசார் நிதி மோசடி தொடர்பான அழைப்புகளை கையாள்வதற்கு ஏதுவாக, கணினி உதவி வடிவமைப்பு தொடர்பான மாறுதல்கள் செய்யப்பட்டு, மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறையில் ஒருமுறை தொடக்கூடிய பொத்தான் அறிமுகப்படுத்தப்பட்டு, 155260 என்ற எண்ணை இணைத்து அதன்மூலம் அழைப்புகள் கணிணிசார் குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்தகைய அழைப்புகள் கணிணிசார் பிரிவில் கையாளப்பட்டு, அழைப்புகள் பெற்ற 24 மணி நேரத்தில் புகார் பதிவு செய்யப்பட்டால், பின்னர் நிதி தொடர்பான

புகார்கள் களைவதற்கு உடனடியாக எடுத்துக் கொள்ளப்படும். இதுவரை, 100/112 என்கிற உதவி எண்கள் மூலம் 1002 இணையவழி பொருளாதார குற்றம் தொடர்பான புகார் அழைப்புகள் மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை / அவசரகால உதவி மையத்திற்கு வரப்பெற்றுள்ளன.

**காவல் களப்பணிக்காக 129 நடமாடும் சிசிடிவி கேமரா வாங்குதல்**

அரசானது ரூ.3.87 கோடி செலவில் 129 நடமாடும் சிசிடிவி வாங்குவதற்காக நிதி ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டம் 2023-24ல் நிறைவேற்றப்படும்.

**மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை அமைத்தல்**

மாநிலம் முழுவதும் இருந்து எண் 100-க்கு அழைக்கும் அழைப்புகளை பெறுவதற்காக மாநில அளவிலான நவீன கட்டுப்பாட்டு அறை ஒன்றை

அமைக்க அரசு ரூ.11.43 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

அவசரகால உதவி மையத் திட்டத்தின் ஒரு பகுதியாக, புதுதில்லியிலுள்ள மத்திய உள்துறை அமைச்சகம் ஆலோசனைப்படி, 112 என்ற எண்ணுக்கு அழைத்தால் அது எழும்பூரிலுள்ள மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு வரும். அவசரகால அழைப்புகளுக்கு இதர துறைகளும் இம்மையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

2022–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, சுமார் 1.65 கோடி அழைப்புகள் பெறப்பட்டு, அவற்றில் 28.47 லட்சம் துயர் நீக்க அழைப்புகள், 1.35 லட்சம் காவல் மற்றும் தீயணைப்பு தொடர்பான புகார்கள் மற்றும் 7.89 லட்சம் பொது விசாரணை அழைப்புகளாகும். மேலும், இம்மையமானது, "காவலன் உயிர்காக்கும் கைப்பேசி" தொடர்பாக 3.12 லட்சம் அழைப்புகளை "காவலன் SOS" ட்ரிகர்கள் அடிப்படையில் பெற்று,

அவற்றில் கிட்டத்தட்ட 49,000 உண்மையான புகார் அழைப்புகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஐ.பி எக்ஸ்சேஞ்ச் என்ற தொலைத்தொடர்பு ரூ.2.04 கோடியில் வாங்கப்பட்டு, இணைக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் 101 எண் அவசர அழைப்புகளும் மாநில அவசர உதவி மையத்தின் மூலம் கையாளப்படும்.

எம்–கடவுச்சீட்டு காவல் செயலியை அமல்படுத்துவதற்காக பழைய சாதனங்களை மாற்றிவிட்டு மாவட்டங்களில்/நகரங்களிலுள்ள காவல் நிலையங்களில் ரூ.4.18 கோடி மதிப்பில் 6 அங்குல கையடக்கக் கணினி 1,675 எண்ணிக்கை வாங்குவதற்காக அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டமானது, எல்காட் மூலமாக 2023–24–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் வாகனங்களை கண்டறியும் நடவடிக்கைகள் மற்றும் களக்காவல் பணிக்கான "முதல்–உதவியாளர்" சாதனம் பயன்படுத்தும் பொருட்டு மொபைல் டேட்டா டெர்மினல் கருவியானது, நெடுஞ்சாலை ரோந்து வாகனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய மொபைல் டேட்டா டெர்மினல் கருவியை மாற்றி புதிதாக 1200 மொபைல் டேட்டா டெர்மினல் கருவியை வாங்கும்பொருட்டு அரசானது ரூ.2.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டமானது எல்காட் மூலமாக 2023–24–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

9 ஆளில்லா விமானங்களுடன் கூடிய ஒரு ஆளில்லா விமான அலகை, ரூ.3.6 கோடி மதிப்பில் பெருநகர சென்னை காவல் துறையில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆளில்லா விமானங்கள் கண்காணிப்பு, கூட்டத்தை கட்டுப்படுத்துல், போக்குவரத்து மேலாண்மை, பேரிடர் காலங்களில் துரித தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை

போன்ற பல்வேறு காவல்துறை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

மேலும், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை மாநகரங்களில், மூன்று ஆளில்லா விமான அலகுகளை உருவாக்க அரசு ரூ.1.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டமானது 2023–24–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

## XXIV. காவல் பயிற்சி

### காவல் பயிற்சிக் கல்லூரி

காவல் பயிற்சிக் கல்லூரியானது காவல் துறை இயக்குநரின் தலைமையில், 1 காவல் துறை தலைவர், 1 காவல் துறை துணை தலைவர், 1 முதல்வர் / காவல் கண்காணிப்பாளர், 6 சார்பு ஆய்வாளர்கள் மற்றும் 49 இதர பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

புதிதாக நியமிக்கப்பட்ட காவலர்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்குதல், காவலர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை

உள்ளவர்களுக்கு புத்துணர்வு பயிற்சி மற்றும் சார்நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி என அனைத்து பயிற்சி சார்ந்த நடவடிக்கைகளையும் காவல் பயிற்சிக் கல்லூரி கண்காணித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 8 நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் 35 தற்காலிக காவல் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி வழங்கப்பட வேண்டிய 94 காவலர்கள் உட்பட புதிதாக நியமிக்கப்பட்ட 10,484 இரண்டாம் நிலை காவலர்களுக்கு 7 மாத அடிப்படை நிறுவன பயிற்சியைத் தொடர்ந்து, ஒரு மாத நடைமுறைப் பயிற்சி வழங்கப்பட்டன.

தருமபுரி, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மாணவர் காவல் படை திட்டத்தை நீட்டிக்க அரசு அறிவிப்பு வெளியிட்டு இதற்கென ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்**

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், இயக்குநர்/ கூடுதல் காவல் துறை இயக்குநர், 1-காவல் துறை தலைவர், 2-காவல் கண்காணிப்பாளர்கள், 4-கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 7-துணை காவல் கண்காணிப்பாளர்கள், 146 காவல் ஆளிநர்கள் மற்றும் 134 இதர பணியாளர்களை கொண்டு இயங்கி வருகிறது.

01.03.2022 முதல் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் 422 உதவி ஆய்வாளர்கள் அடிப்படை நிறுவனப் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், நேரடியாக நியமனம் செய்யப்பட்ட 20 காவல் துணை கண்காணிப்பாளர்களும் தங்களது ஒரு வருட அடிப்படை நிறுவனப் பயிற்சிக்காக 01.03.2022 அன்று தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் அறிக்கை செய்துள்ளனர். 09.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர்கள்

மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார்.

உதவி ஆய்வாளர் பயிற்சியினை முடித்த 932 காவல் உதவி ஆய்வாளர்கள் 29.08.2022 அன்று பயிற்சி நிறைவு அணிவகுப்பு நடத்தினர்.

சுங்கம்/சரக்கு மற்றும் சேவைத் துறையினருக்கான பயிற்சி வகுப்புகள், காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (BPR&D) மற்றும் சமூக பாதுகாப்பிற்கான தேசிய நிறுவனம் (NISD) உதவியுடன் அளிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் உள்ளிட்ட மொத்தம் 52 திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்புகள் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடத்தப்பட்டன.

31.08.2021 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.10.28 கோடி செலவில், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் ஒருங்கிணைந்த இணையவழி குற்றத் தடுப்பு வளாகம்

கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் இக்கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

## XXV. மோப்பநாய்ப் படை மற்றும் குதிரைப் படை

### மோப்பநாய்ப் படை

பயிற்சி பெற்ற மோப்ப நாய்கள் உதவியுடன் குற்ற வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும், ஆதாரங்களை சேகரிக்கவும் மோப்பநாய்ப் படை உதவி செய்து வருகிறது. மோப்ப நாய்களுக்கு வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களை கண்டுபிடிப்பதற்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்கள், மாநகர காவல் ஆணையரகங்கள் மற்றும் சிறப்புப் பிரிவுகளான சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை மற்றும் அதிதீவிரப்படை ஆகியவற்றிலும் மோப்ப நாய்ப்படை பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் மோப்ப நாய்ப்படை பிரிவில், மொத்தமுள்ள 163 நாய்களில், குற்றவாளிகளை கண்டுபிடிக்க 68 மோப்ப நாய்களும், வெடிமருந்துகள் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டறிய 89 மோப்ப நாய்களும், தாக்குதலுக்கு 2 நாய்களும் மற்ற பணிகளுக்கு 4 நாய்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**குதிரைப் படை**

காவல்துறையின் குதிரைப்படையானது கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், குடியரசு தினவிழா மற்றும் சுதந்திர தின விழாக்களின் போதும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறது. குதிரைப் படையில் மொத்தம் 29 குதிரைகள் உள்ளன. காவல்துறை குதிரைப் படையானது சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் நடைபெறும் பண்டிகைகள்/ஊர்வலங்கள், பெரிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளின்போது கூட்டங்களைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

## XXVI. கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள்

**கட்டிடங்கள்**

01.01.2023 உள்ளபடி, அரசுக் கட்டிடங்களில் 1,201 தாலுக்கா காவல் நிலையங்களும், 201 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், வாடகைக் கட்டிடங்களில் 104 தாலுக்கா காவல் நிலையங்களும் 21 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

28.02.2023 உள்ளபடி, 588 அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகள், 1,541 காவல் ஆய்வாளர்கள், 3,932 சார்பு ஆய்வாளர்கள், 59861 தலைமை காவலர்கள் / காவலர்கள் ஆகியோருக்கு காவலர் குடியிருப்புகள் உள்ளன. மேலும், புதிதாக 2,149 காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

2022–ஆம் ஆண்டு ரூ.371.72 கோடி செலவில் மொத்தம் 2,157 காவலர் குடியிருப்புகளும்,

ரூ.19.60 கோடி செலவில் 18 காவல் நிலைய கட்டிடங்களும், ரூ.47.53 கோடி செலவில் 27 காவல்துறை கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2022-ஆம் ஆண்டில் ரூ.70.95 கோடி செலவில் மொத்தம் 184 அலகுகளுக்கு, அதாவது குடியிருப்புகள் / காவல் நிலைய கட்டிடங்கள் / இதர காவல்துறைக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மேலும், ரூ.142.72 கோடி செலவில் 881 குடியிருப்புகளும், ரூ.26.98 கோடி செலவில் 22 காவல் நிலைய கட்டிடங்களும், ரூ.135.77 கோடி செலவில் 13 காவல்துறைக்கான கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

**மோட்டார் வாகனம்**

28.02.2023 உள்ளபடி, தமிழ்நாடு காவல் துறையில் உள்ள வாகனங்களின் விவரம் பின்வருமாறு:–

| வாகனத்தின் வகை | வாகனம் | வாகன எண்ணிக்கை |
|---|---|---|
| கனரக வாகனங்கள் | பேருந்து / லாரி | 860 |
| மிதரக வாகனங்கள் | சிற்றுந்து / வேன் | 1880 |
| இலகுரக வாகனங்கள் | கார் / ஜீப் | 6362 |
| இருசக்கர வாகனங்கள் | மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், ஏடிவி மோட்டார் சைக்கிள் மிதிவண்டி | 10877 |
| சிறப்பு வகை வாகனங்கள் | வஜ்ரா, வருண், க்ரேன், கைதிகள் வழிக்காவல், ஆம்புலன்ஸ், ரெக்கர், தண்ணீர் லாரி, நடமாடும் நீதிமன்றம், நடமாடும் கழிவறை வேன் போன்றவைகள் | 603 |
| **மொத்தம்** | | **20,582** |

471 நான்கு சக்கர வாகனங்களும், 841 இருசக்கர வாகனங்களும், 19 வேன்களும், 6 பேருந்துகளும், 5 லாரிகளும், 5 நான்கு சக்கர விபத்து மீட்பு வாகனமும், 5 இருசக்கர வாகனங்கள் விபத்து மீட்பு வாகனங்களும் மற்றும் ஒருங்கிணைந்த உத்தரவு மையத்திற்கு ஒரு வாகனமும் (மொத்தம் 1,353 வாகனங்கள்) ரூ.66.37 கோடி செலவில் வாங்கப்பட்டு பல்வேறு காவல் பிரிவுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

தூத்துக்குடி, ஈரோடு மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்கு ரூ.1.99 கோடி செலவில் 20 நான்கு சக்கர ரோந்து வாகனங்கள் வாங்குவதற்கு தமிழக அரசு அனுமதி அளித்தது. அவ்வாகனங்கள் வாங்கப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

## XXVII. தமிழ்நாடு தடய அறிவியல் துறை

தமிழ்நாடு தடய அறிவியல் துறையானது, மாநில காவல்துறை, சுங்கத்துறை, மத்திய புலனாய்வுத் துறை,

தேசிய புலனாய்வு முகமை போன்ற சட்ட அமலாக்க முகமைகளுக்கு அறிவியல் ரீதியிலான சேவைகளை வழங்கி, அதன் மூலம் நீதிபரிபாலன முறையை நிலைநாட்ட முக்கிய பங்காற்றி வருகிறது. அறிவியல் மூலமாக நீதியை நிலைநாட்டும் வகையில் நீதித்துறைக்கும் இத்துறை பெருமளவு உதவி வருகிறது.

தடய அறிவியல் துறையின் பிரதான ஆய்வகம் சென்னையில் உள்ளது. இதன் 15 சிறப்புப் பிரிவுகள், 10 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் 38 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் (காவல் மாவட்டம் / ஆணையரகங்களில் தலா ஒன்று) ஆகியவை உள்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் (அரியலூர், தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர்,

இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை காவல் மாவட்டங்கள், தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்கள்) தலா ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் வீதம், 9 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தடய அறிவியல் துறையில், அறிவியலாளர், தொழில்நுட்ப, அமைச்சுப் பணியாளர்கள் உட்பட 613 பேர் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை பிரதான ஆய்வகத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்ட (போக்சோ) வழக்குகளில் தொடர்புடைய உயிரி மாதிரிகளை ஆய்வு செய்யும் விதமாக, நிர்பயா திட்ட நிதியின்கீழ் நிறுவப்பட்ட பிரத்யேக மரபணு பிரிவானது, பகுப்பாய்வின் செயல்திறனை மேம்படுத்தும் வகையிலும், போக்சோ சட்டத்தின் கீழான வழக்குகளின் புலன் விசாரணைக்கு சரியான நேரத்தில்

உதவும் வகையிலும் முழுமையாக செயல்பட்டு வருகிறது.

குற்ற நிகழ்விடத்தில் முதற்கட்ட பரிசோதனையை மேற்கொள்வதற்கான வசதிகளுடன் கூடிய நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்கள், அளிக்கப்பட்டுள்ளன. மேலும், இதுபோன்ற 14 வாகனங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 01.07.2022 அன்று கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டன. நிலுவையற்ற நிலையை அடைவதற்காக சிறப்பு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

**இத்துறையால் தொடங்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் மூலம், 2021–ஆம் ஆண்டு, (2,84,642 மாதிரிகள் உள்ளடக்கிய) 69,349 வழக்குகளுடன் ஒப்பிடுகையில், 2022–ஆம் ஆண்டில்,**

**91,510 வழக்குகள் வரை (3,81,459 மாதிரிகள் உள்ளடக்கிய) பகுப்பாய்வு முடிவுகளை எட்ட முடிந்தது.**

பிரதான ஆய்வகத்திற்கு சோதனை மற்றும் அளவுத்திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தினால் (NABL) தரநிலை ISO/IEC 17025: 2017–ன் படி 13.5.2022 அன்று முதல் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

சென்னை பிரதான ஆய்வகத்தில் கணினி வழி தடய ஆய்வகப் பிரிவுக்கென ரூ.3.71 கோடி அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு உயிரி மாதிரிகளின் மரபணு வகைப்படுத்தலுக்கான மரபியல் ஆராய்ச்சிக்கு நவீன கருவிகள் வாங்க அரசினால் ரூ.1.2 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

தடய அறிவியல் துறை சென்னை பிரதான ஆய்வகத்திற்கு திரவ நிறச்சாரல் பிரிகை நிறைநிலைமானி கருவி [Liquid Chromatograph – Mass

Spectrometer (LC–MS/MS)] வாங்க அரசினால் ரூ.2.5 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## XXVIII. காவல் துறை நவீனமயமாக்கல்

மத்திய மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்திலான பங்களிப்புடன் காவல் துறை நவீனமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பல்வேறு உபகரணங்கள் / சாதனங்கள் வாங்குவதற்காக ரூ.24.28 கோடி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கண்காணிப்பு கேமராக்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கல் ஆகியவற்றுக்காக 14.06.2022 அன்று ரூ.2.50 கோடியும், சென்னை நகரில் கூட்ட நெரிசல் மிக்க இடங்கள் மற்றும் போக்குவரத்தை கண்காணிப்பதற்காக டிரோன் போலிஸ் பிரிவினை துவக்குவதற்காக ரூ.3.6 கோடியும் தமிழ்நாடு அரசினால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. காவல்துறை நவீனமயமாக்கல்

திட்டத்தின் கீழ் பல்வேறு உபகரணங்கள் வாங்குவதற்காக 2022-2023-ஆம் ஆண்டில் ரூ.95.42 கோடிக்கான செயல் திட்டம் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## XXIX. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

காவல்துறை இயக்குநர் தலைமையில், 1 கூடுதல் காவல்துறை இயக்குநர், 1 காவல்துறை தலைவர், 2 காவல் கண்காணிப்பாளர்கள், 3 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 3 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 4 காவல் ஆய்வாளர்கள், 1 காவல் உதவி ஆய்வாளர், 2 காவலர்கள், 1 சட்ட ஆலோசகர், 1 உதவி சட்ட ஆலோசகர் மற்றும் 33 அமைச்சுப் பணியாளர்களுடன் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் இயங்கி வருகிறது.

காவல்துறை, சிறை மற்றும் சீர்திருத்த சேவைகள் , தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலைப்

பணியாளர்களை நியமிப்பதற்காக 29.11.1991 அன்று தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது.

அரசின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், 2022–ஆம் ஆண்டு காவல் உதவி ஆய்வாளர் தேர்வு மற்றும் பிற சீருடைப் பணியாளர் தேர்வுக்கு முதல் முறையாக தமிழ் மொழி தகுதித் தேர்வை நடத்தியது.

2022–ஆம் ஆண்டு, 444 காவல் உதவி ஆய்வாளர்கள் (தாலுகா மற்றும் ஆயுதப்படை) தேர்வு செய்ய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 08.03.2022 அன்று அறிவிப்பாணை வெளியிட்டது.

மொத்தம் 2,22,213 விண்ணப்பதாரர்கள் மேற்படி தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தனர். 438 தேர்வர்களுக்கான இறுதி தேர்ச்சிப் பட்டியல் 18.11.2022 அன்று வெளியிடப்பட்டது.

அதேபோன்று, 3552 இரண்டாம் நிலை காவலர்கள், 161 இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள், 120 தீயணைப்பு வீரர்கள் ஆகியோரை நியமிப்பதற்கான பொதுத் தேர்வு குறித்த அறிவிப்பாணை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் 30.6.2022 அன்று வெளியிடப்பட்டது. இத்தேர்வின் இறுதி முடிவுகள் 29.03.2023 அன்று வெளியிடப்பட்டது.

## XXX. காவலர் நலன்

### தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்

காவல்துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களின் நிலையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு அளிக்கும் கொடை, பணியாளர்கள் தாமாக முன்வந்து அளிக்கும் சந்தா மற்றும் இந்நிதியின் உறுப்பினர்கள் அளிக்கும் நன்கொடை ஆகியவற்றிலிருந்து இக்கொடை திட்டம்

செயல்படுகிறது. காவல் ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக கண்காணிப்பாளர்கள் வரையிலான பணியாளர்கள் இந்நிதியின் மூலம் பயன்பெறுவார்கள். காவல்துறை கருணைக் கொடை திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரண நிதி:–

| **வ. எண்** | **திட்டங்கள்** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 1. | சந்தாதாரர் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் நிவாரணம் | 50,000/– |
| 2. | சந்தாதாரரின் குடும்பத்தினர் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் நிவாரணம் | 10,000/– |
| 3. | சந்தாதாரரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை (பள்ளி கல்வி/ கல்லூரி கல்வி – இளநிலை பட்டப்படிப்பு) | 12,000 முதல் 20,000 வரை |
| 4. | பணியாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை | 12,000 முதல் 20,000 வரை |
| 5. | சிறப்பு மருத்துவ நிவாரணம் | 25,000/– |
| 6. | மரணம் விளைவிக்கும் நோய்களுக்கு நிதி உதவி | 5,00,000/– |

**சிறப்பு மருத்துவ நிவாரணம்**

உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நோய்களால் பாதிக்கப்பட்ட சந்தாதாரர்களின் சிகிச்சைக்காக அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை சிறப்பு மருத்துவ நிவாரணம் வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடை திட்ட மத்தியக் குழு ஆண்டுதோறும் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

சீருடைப் பணியில் காவல் ஆய்வாளர் பதவி வரையில் உள்ள பணியாளர்களும், அமைச்சுப் பணியில் கண்காணிப்பாளர் பதவி வரையில் உள்ள பணியாளர்களும் விடுக்கும் மருத்துவ உதவிக் கோரிக்கைகள் தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்ட சிறப்பு மருத்துவ நிவாரணக் குழு மூலம் ஒப்பளிக்கப்படுகிறது. 2022–2023–ம் நிதியாண்டில் ரூ.6.3 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**வருடாந்திர அரசு பரிசுக் கொடையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

ஆண்டுதோறும் ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் / மாநகரிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் முறையே முதல் 10 இடங்களைப் பிடிக்கும் காவல்துறை பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் துவக்கப்பட்டது.

| வகுப்பு | முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | 4 முதல் 10 வரை |
|---|---|---|---|---|
| 10 | ரூ.6,500/- | ரூ.4,500/- | ரூ.2,500/- | ரூ.2,000/- |
| 12 | ரூ.7,500/- | ரூ.5,500/- | ரூ.3,500/- | ரூ.2,500 |

2021-2022-ம் கல்வி ஆண்டில், 342 காவல் பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு ரூ.12.23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் பரிசு**

காவல்துறை பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு உயர்கல்வியை ஊக்குவிக்கவும், தொடரவும் சிறப்பு கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.25,000/- அல்லது கல்வி நிறுவனங்களில் செலுத்தப்படும் சரியான கட்டணம், இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை நான்கு வருட காலத்திற்கு அல்லது அப்படிப்பு முடியும் வரை வழங்கப்படுகிறது. விடுதிக் கட்டணத்தையும் சேர்த்து அரசு இக்கொடையை ரூ.1 கோடியிலிருந்து ரூ1.2 கோடியாக உயர்த்தியுள்ளது.

**கருணைத் தொகை வழங்குதல்**

காவல் பணியாளர்கள் பணியின்போது உயிரிழக்க நேரிட்டால் அல்லது ஊனமடைந்தால் அல்லது காயமடைந்தால், அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் / இழப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் அக்காவல் பணியாளர்கள் அல்லது அவர்களது சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு ரூ.20,000/- முதல் ரூ.15 லட்சம் வரை கருணைத் தொகை வழங்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. 2022-2023-ஆம் ஆண்டில் 166 காவல் பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.40.60 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு காவலர் காப்பீட்டுத் திட்டம்**

காவல் பணியாளர்கள் பணியின்போது விபத்து ஏற்பட்டு உயிரிழக்க நேர்ந்தால், கீழ்க்கண்டவாறு காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. அனைத்து நிலைகளில் உள்ள காவல் பணியாளர்கள் / அலுவலர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

| நிலை | உயிரிழப்பு | நிரந்தர மற்றும் பகுதி ஊனம் |
| --- | --- | --- |
| காவலர் முதல் ஆய்வாளர் வரை | ரூ.4 லட்சம் | ஊனத்தின் சதவீதத்தின்படி |
| காவல் துணை கண்காணிப்பாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரை | ரூ.8 லட்சம் | |
| காவல் கண்காணிப்பாளர் முதல் காவல்துறை தலைவர் வரை | ரூ.10 லட்சம் | |
| கூடுதல் காவல்துறை இயக்குனர் | ரூ.15 லட்சம் | |
| காவல்துறை இயக்குநர் | ரூ.20 லட்சம் | |

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அரசு ரூ.60 லட்சம் ஒதுக்கி வருகிறது. இவ்வாண்டு 11 பயனாளிகளுக்கு ரூ.23 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**உணவு மானியத் திட்டம்**

காவல் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, எண்ணெய் போன்றவை இத்திட்டத்தின் மூலம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் 63,205 காவல் பணியாளர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூ.8.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முழு உடல் மருத்துவப் பரிசோதனை**

30 வயது நிரம்பிய காவல் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒரு முறை அரசு மருத்துவமனைகளில் இலவச முழு உடல் மருத்துவப் பரிசோதனை அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது முழு உடல் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவப் பரிசோதனை திட்டம் ஆகியவற்றின்கீழ் 2022–ஆம் ஆண்டில் 74,023 காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் பயனடைந்துள்ளனர்.

**தமிழ்நாடு காவல் அங்காடிகள்**

தமிழ்நாடு அரசு இதுவரை 56 காவல் அங்காடி அலகுகளை துவக்கியுள்ளது. இவை மாநிலம் முழுவதும் உள்ள ஏழு தலைமை அங்காடிகளின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல்துறை பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், வனத்துறையினர் மற்றும் சிறைத்துறை பணியாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர்.

தற்போது 1,80,550 குடும்பங்கள் (காவல்துறை – 1,58,044, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை – 8,786, சிறைத்துறை – 5,878 மற்றும் வனத்துறை – 7,842) பயனடைந்து வருகின்றன.

புதிதாக உருவாக்கப்பட்ட கள்ளக்குறிச்சி, தென்காசி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை ஆகிய

மாவட்டங்களில் ஆறு காவல் அங்காடி அலகுகள் 15.09.2022 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி**

பணியின்போது உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் மற்றும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக உயிரிழந்த 124 காவல் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.30.37 கோடி இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

**கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள்**

பணியிலிருந்தபோது இறந்த காவல் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிட ஏதுவாக, 1,132 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களை சரண்

செய்து, 1,132 தரவு உள்ளீடு உதவியாளர்கள் / வரவேற்பாளர் பணியிடங்களை உருவாக்க தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 1,025 பேர் தரவுப் உள்ளீடு உதவியாளர்கள் / வரவேற்பாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 107 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

**காவலர்–மக்கள் தொடர்பு – "அன்பான அணுகுமுறை"**

காவலர் – மக்கள் தொடர்பை மேம்படுத்த 1.2 இலட்சம் காவல் பணியாளர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி உதவியுடன் பயிற்சி அளிக்க அரசு அறிவித்துள்ளது.

2021–2022 ஆம் ஆண்டிற்கு ரூ.2.70 கோடி நிதி ஒப்பளிப்பு 30.11.2021 அன்று வழங்கப்பட்டு, 09.02.2023 முதல் சென்னை அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சிறப்பு பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

**காவல் ஆளிநர்களின் வாரிசுகளுக்கான வேலைவாய்ப்பு முகாம்**

காவல் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் அவர்களது வாழ்க்கை இணையர்களுக்கு, தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற உதவி செய்யும் பொருட்டு, காவல்துறை தலைமையகத்தில் வேலைவாய்ப்பு பிரிவு என்ற புதிய பிரிவு ஒன்று துவக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்கள் ஐந்து இடங்களில் நடத்தப்பட்டு, அதில் 4,009 பேர் கலந்து கொண்டனர். இதில், 274 நிறுவனங்கள் பங்கேற்று, 672 பேர் பல்வேறு பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**காவல் ஆணையம்**

காவலர் பொதுமக்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும் காவல்துறை பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் அவர்களுக்கு தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி

முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ஓய்வு பெற்ற நீதிமன்ற மாண்புமிகு நீதி அரசர் திரு.சி.டி.செல்வம் அவர்களது தலைமையில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐந்தாவது காவல் ஆணையம் (Fifth Police Commission) ஒன்று அமைக்கப்பட்டு, அந்த ஆணையம் தனது இடைக்கால பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. இப்பரிந்துரைகளை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## XXXI. முடிவுரை


காவல்துறையானது மக்கள் பார்வையில் எளிதில் தெரியக்கூடிய அரசுத் துறைகளில் மிக முக்கியமானதாகும். ஆபத்து, நெருக்கடி மற்றும் அவசர காலங்களில் மக்களுக்கு உடனடியாக முதலில் உதவிக்கு வருவது காவல்துறை தான்.

காவல்துறை தனது கடமைகளை திறமையாகவும், சிறப்பாகவும் செய்வதை உறுதி செய்ய காவல்துறையினரின் திறனை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. காவல்துறையினரின்


தொழில்நுட்பத் திறனையும் அவர்களின் திறமையையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன்மூலம் உயர்தர காவல் சேவைகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது. இக்கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் பொருட்டு மாநிலத்தின் நலனுக்காகவும் நன்மைக்காகவும் காவல்துறைக்கு அனைத்து வகைகளிலும் துணை நிற்கவும், உதவி புரியவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

**மு.க.ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

## விளக்கப்படம் I : காவல்துறையின் நிருவாக அமைப்பு



## விளக்கப்படம் – II : காவல்துறையில் உள்ள பிரிவுகள்



# பிற்சேர்க்கை – I


## 2020 முதல் 2022 வரையிலான சொத்து தொடர்பான வழக்குகளும், கண்டுபிடிப்பும்

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2020 | | 2021 | | 2022 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | க.பி. | பதிவு | க.பி. | பதிவு | க.பி. |
| 1. | ஆதாயக் கொலை | 64 | 57 | 89 | 85 | 93 | 86 |
| 2. | கொள்ளை | 128 | 123 | 111 | 109 | 141 | 134 |
| 3. | வழிப்பறி (உடைமை பறிப்பு வழக்குகள் உட்பட) | 2023 | 1570 | 2558 | 2050 | 2723 | 2190 |
| 4. | கன்னக் களவு | 4275 | 2347 | 5157 | 2831 | 5902 | 3270 |
| 5. | திருட்டு | 12492 | 6465 | 14274 | 8602 | 17808 | 9179 |
| | மொத்தம் | **18982** | **10562** | **22189** | **13677** | **26667** | **14859** |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றம் தொடர்பான விவரம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

பதிவு – பதிவு செய்யப்பட்ட வழக்குகள்

க.பி. – கண்டுபிடிக்கப்பட்டவை



## பிற்சேர்க்கை – II

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | சொத்து | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|
| 1 | இழக்கப்பட்ட சொத்து | 111.43 | 177.85 | 191.64 |
| 2 | மீட்கப்பட்ட சொத்து | 68.96 | 115.31 | 108.63 |
| 3 | மீட்பு சதவிகிதம் | 62% | 65% | 57% |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றம் தொடர்பான விவரம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

# பிற்சேர்க்கை – III

## 2020 முதல் 2022 வரை பதியப்பட்ட இந்திய தண்டனை சட்ட வழக்குகள் (தலைப்பு வாரியாக)

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2020 | 2021 | 2022# |
|---|---|---|---|---|
| சொத்து சம்பந்தப்பட்ட குற்றங்கள் | | | | |
| 1 | ஆதாயக் கொலை | 64 | 89 | 93 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 128 | 111 | 141 |
| 3 | கூட்டுக் கொள்ளையில் ஈடுபட குழுமியிருத்தல் | 68 | 128 | 65 |
| 4 | வழிப்பறி | 2023 | 2558 | 2723 |
| 5 | கன்னக்களவு | 4275 | 5157 | 5902 |
| 6 | திருட்டு | 12492 | 14274 | 17808 |
| கொடுங்குற்றங்கள் | | | | |
| 7 | கொலை | 1597 | 1597 | 1597 |
| 8 | கொலை முயற்சி | 2548 | 2842 | 2623 |
| 9 | கொலை என கருத முடியாத மரணம் விளைவிக்கும் குற்றம் | 72 | 71 | 86 |
| 10 | அடிதடி | 20867 | 22170 | 25821 |
| 11 | கலவரங்கள் | 2122 | 2275 | 2229 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்கள் | | | | |
| 12 | கற்பழிப்பு | 404 | 442 | 432 |
| 13 | வரதட்சணை மரணங்கள் | 40 | 27 | 29 |
| 14 | மானபங்கம் | 892 | 1077 | 1414 |
| 15 | பாலியல் வன்கொடுமை | 31 | 32 | 58 |

| வ. எண் | குற்றத்தின் தலைப்பு | 2020 | 2021 | 2022# |
|---|---|---|---|---|
| 16 | கணவன் மற்றும் உறவினர்கள் கொடுமை | 689 | 875 | 1043 |
| 17 | பெண் கடத்தல் | 633 | 638 | 535 |
| **பிற முக்கிய குற்றங்கள்** | | | | |
| 18 | ஆட்கடத்தல் | 132 | 183 | 201 |
| 19 | நம்பிக்கை மோசடி | 141 | 126 | 216 |
| 20 | தீ வைப்பு | 463 | 461 | 504 |
| 21 | மோசடி | 2717 | 3382 | 4320 |
| 22 | கள்ளநோட்டு | 38 | 62 | 37 |
| 23 | மரண விபத்துகள் | 13868* | 14747 | 16997 |
| 24 | மரணம் ஏற்படுத்தாத விபத்துகள் | 35976* | 40935 | 47180 |
| 25 | பிற இ.த.ச குற்றங்கள் | 53912 | 62473 | 57902 |
| 26 | கோவிட்–19 விதிமீறல் வழக்குகள் | 739578 | 146114 | 4141 |
| **மொத்த இ.த.ச வழக்குகள்** | | **891696**** | **322846** | **194097** |
| **குற்ற விகிதாச்சாரம்** | | **1170.71** | **422.14** | **253.04** |
| **மக்கள் தொகை (இலட்சங்களில்)***** | | **761.67** | **764.79** | **767.07** |

**குறிப்பு:**

*2020 ஆம் வருட சாலை விபத்துகளின் மொத்த தரவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**மொத்த IPC வழக்குகள் வெளியிடப்பட்ட தரவு. அதில் பிரதிபலிக்கவில்லை.

*** இந்திய தேசிய மக்கள் தொகை ஆணைய தரவு.

#2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்ற வழக்குகளின் விவரம் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

## பிற்சேர்க்கை – IV
## வன்குற்ற நிகழ்வுகளும், தீர்க்கப்பட்டவைகளும் (2020–2022)

| வ.எண் | தலைப்பு | 2020 | | | | 2021 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. |
| 1 | கொலை | 1597 | 919 | 638 | 40 | 1597 | 903 | 660 | 34 | 1597 | 1013 | 554 | 30 |
| 2 | கொலை முயற்சி | 2548 | 826 | 1696 | 26 | 2842 | 1012 | 1803 | 27 | 2623 | 1041 | 1549 | 33 |
| 3 | அடிதடி | 20867 | 8495 | 11620 | 752 | 22170 | 7898 | 13644 | 628 | 25821 | 10684 | 14307 | 830 |
| 4 | கலவரம் | 2122 | 647 | 1376 | 99 | 2275 | 567 | 1616 | 92 | 2229 | 533 | 1593 | 103 |
| **மொத்தம்** | | 27134 | 10887 | 15330 | 917 | 28884 | 10380 | 17723 | 781 | 32270 | 13271 | 18003 | 996 |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்றத் தரவுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

பதிவு – பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. – குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணையில் நிலுவை) (வருடம் வாரியாக)

பு.வி. – புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ.மு. – பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்கு புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) (வருடம் வாரியாக)

## பிற்சேர்க்கை V

### 2020 முதல் 2022 வரை நடந்த கொலை நிகழ்வுகளுக்கான காரணம்

| வ.எண் | காரணம் | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|
| 1 | குடும்பத் தகராறு | 357 | 379 | 446 |
| 2 | வாய்த் தகராறு | 322 | 337 | 333 |
| 3 | முன்விரோதம் | 312 | 220 | 186 |
| 4 | காதல் மற்றும் பாலியல் காரணங்கள் | 229 | 221 | 181 |
| 5 | பணம் கொடுக்கல் வாங்கல் | 55 | 59 | 61 |
| 6 | நிலத்தகராறு | 123 | 115 | 120 |
| 7 | குடிபோதையில் தகராறுகள் | 68 | 109 | 147 |
| 8 | வரதட்சணை கொடுமை | 5 | 4 | 2 |
| 9 | அரசியல் காரணங்கள் | 4 | 1 | 3 |
| 10 | இதர காரணங்கள் | 118 | 143 | 113 |
| 11 | சாதி பாகுபாடு | 4 | 9 | 5 |
| **மொத்தம்** | | **1597** | **1597** | **1597** |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்றத் தரவுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

## பிற்சேர்க்கை – VI

## பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

| வ. எண் | குற்ற வகை | 2020–ல் பதிவான வை | 2021–ல் பதிவான வை | 2022–ல் பதிவான வை |
|---|---|---|---|---|
| 1 | பாலியல் பலாத்காரம் | 404 | 442 | 432 |
| 2 | வரதட்சணை மரணம் | 40 | 27 | 29 |
| 3 | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 689 | 875 | 1043 |
| 4 | மானபங்கம் | 892 | 1077 | 1414 |
| **மொத்தம்** | | **2025** | **2421** | **2918** |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்றத் தரவுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

## பிற்சேர்க்கை – VII
## பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வுகளும், தீர்த்து வைக்கப்பட்டவையும் (2020–2022)

| வ.எண் | தலைப்பு | 2020 | | | | 2021 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. | பதிவு | கு.ப. | பு.வி. | பி.வ.மு. |
| 1 | பாலியல் பலாத்காரம் | 404 | 205 | 184 | 15 | 442 | 156 | 270 | 16 | 432 | 183 | 232 | 17 |
| 2 | வரதட்சணை மரணம் | 40 | 16 | 24 | 0 | 27 | 11 | 14 | 2 | 29 | 13 | 16 | 0 |
| 3 | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 689 | 205 | 446 | 38 | 875 | 180 | 649 | 46 | 1043 | 282 | 696 | 65 |
| 4 | மானபங்கம் | 892 | 360 | 457 | 75 | 1077 | 369 | 665 | 43 | 1414 | 579 | 772 | 63 |
| **மொத்தம்** | | **2025** | **786** | **1111** | **128** | **2421** | **716** | **1598** | **107** | **2918** | **1057** | **1716** | **145** |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்றத் தரவுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

பதிவு – பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (வருடம் வாரியாக)

கு.ப. – குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவை (தண்டனை, விடுவிப்பு, முடிக்கப்பட்டது மற்றும் நீதிமன்ற விசாரணையில் நிலுவை) (வருடம் வாரியாக)

பு.வி. – புலன் விசாரணையில் உள்ளவை (வருடம் வாரியாக)

பி.வ.மு. – பிற வகையில் முடிக்கப்பட்டவை (கண்டுபிடிக்க முடியாதவை, உண்மைக்கு அல்லது சட்டத்துக்கு புறம்பானவை, மாற்றம் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டவை) (வருடம் வாரியாக)

## போக்சோ சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் –

## 2020–2022

| வ.எண் | குற்றத் தலைப்பு | தாக்கலானவை | | |
|---|---|---|---|---|
| | | 2020 | 2021 | 2022 |
| 1. | போக்சோ – கற்பழிப்பு | 2229 | 3433 | 3631 |
| 2. | போக்சோ – மற்றவை | 861 | 1032 | 1344 |
| **மொத்தம்** | | **3090** | **4465** | **4975** |

**குறிப்பு:** 2022–ஆம் ஆண்டிற்கான தரவுகள் உத்தேசமான எண்ணிக்கை மட்டுமே. தமிழ்நாட்டிற்கான குற்றத் தரவுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.




மாநிலம் முழுவதும் 20 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் (AWPS) 16.06.2022 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தல்.




14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்களை 01.07.2022 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தல்.



மாண்புமிகு துணை-ஜனாதிபதி அவர்களால் 'ஜனாதிபதி வண்ணங்கள்'
தமிழ்நாடு காவல்துறைக்கு 31.07.2022 அன்று வழங்கப்பட்டது.




“போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு” திட்ட தொடக்க விழாவில், உலக சாதனை படைத்தமைக்காக “Asia Book of Records” அமைப்பின் நிர்வாகி அதற்கான சான்றிதழை 11.08.2022 அன்று வழங்குதல்.




13.12.2022 அன்று 41வது அகில இந்திய காவல்துறை குதிரையேற்ற சாம்பியன்ஷிப் மற்றும் காவல்துறைக்கான குதிரையேற்ற போட்டிகளில் பதக்கங்கள் மற்றும் கோப்பைகளை வென்ற காவல்துறை வீரர்கள் வாழ்த்து தெரிவித்தல்.




03.01.2023 அன்று காவல் துறை இயக்குநர் அவர்கள் போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டு சாதனை படைத்ததற்காக வழங்கப்பட்ட சான்றிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காண்பித்தல்.




17.03.2023 அன்று "மகளிர் காவலர்கள் பொன்விழா ஆண்டு" நிகழ்ச்சியில் மிதிவண்டி பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தல்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.